Regd No. TN/TJ/17.

தமிழ் வாழ்க

தமிழ்ப்பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

எண் :

திரு. .... அவர்கள்

மா. 5. ஆசிரியர்,
தஞ்சை சரபோசி மன்னர்
சரஸ்வதி மகால் நூல்நிலையம்
அரண்மனை, தஞ்சாவூர்.

கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர்-613 002.

விற்பனைக்குக் கிடைக்கும் நூல்கள்

நெல்லை வருக்கக் கோவை	0—12
சித்தாந்தாதி	0—12
சுருதி வீணை	0—25
கவியரசு நினைவுமலர்	1—00
சிவமும் செந்தமிழும்	0—25
Garland of Tamil Poetry	2-00
கச்சிக் கலம்பகம்—(பூண்டி அரங்கநாத முதலியார்)	0—50
தமிழரசி குறவஞ்சி	0—62
யாழ் நூல்—சுவாமி விபுலானந்தர்	50—00
கட்டுரைப்பொழில் (பணிவிழா மலர்)	30—00
மெய்ஞ்ஞானத்தின்—கொலுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு (இரண்டாம் பதிப்பு)	2—00
நக்கீரர்—ந. மு. வேங்கடசாமி நாட்டார் (இரண்டாம் பதிப்பு)	3—00
கபிலர் ,, ,,	4—00
பிற வெளியீடுகள் :	
கலைக்கூத்தன் கவிதைகள்	6—00

வெளியிடுபவர் : திரு. ச. இராமநாதன், தலைவர், கரந்தைத் தமிழ்ச்சங்கம், கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்-613 002.
அச்சிடுபவர் : திரு. M. சந்திரமௌலி.
ஜெமினி அச்சகம், 1837/1, மேல ராஜ வீதி, தஞ்சாவூர்-613 009.

தமிழ் வாழ்க

தமிழ்ப்பொழில்

THANJAVUR.
23-11-84

துணர் : 58

மலர் :

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

தொண்டு தமிழ் முன்னேற்றம்

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

திருவள்ளுவர் யாண்டு: 2015—இரத்தாட்சி புரட்டாசி
(1984 செப்டம்பர் — அக்டோபர்)

MALLIKA ARTS TJ

பொழிற்றொண்டர் :
ச. பாலசுந்தரம்

தமிழ்ப் பொழில்

துணர் : 58 | உள்ளுறை | மலர் : 6

1. வ. உ. சி. யின் சிந்தனைகள் 281
மா. ரா. அரசு, எம். ஏ.

2. பல்லவர் கால இலக்கியங்களில்
சமுதாயம் 292
(சென்ற இதழ் தொடர்ச்சி)

3. கற்பனையால் ஆம் கட்டு 298
டாக்டர், மொ. அ. துரை அரங்கசாமி
எம். ஏ., எம். ஓ. எல்., பிஎச். டி.

4. தமிழ் இலக்கியத்தில் உரிமை வழக்கு 306
டாக்டர். இராம. சுப்பிரமணியன்.
7, தீத்தாரப்ப முதலி தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-600 005.

5. தமிழ்-ஆங்கில வினாவகைகள்-ஓர் ஒப்பீடு.... 314
S. ரேணுகாதேவி, ஆய்வாளர்,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்,
மொழியியல் துறை, மதுரை-625 021.

தமிழ் வாழ்க

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

துணர் : 58	திருவள்ளுவர் யாண்டு — 2015 இரத்தாட்சி — புரட்டாசி செப்டம்பர் — அக்டோபர் 1984	மலர் : 6

வ. உ. சி. யின் சிந்தனைகள்

மா. ரா. அரசு

வாழ்க்கை எஎபது நமக்காகவா ? பிறருக்காகவா ? தன்னலமா ? பொதுநலமா ? எது வாழ்வின் அடிப்படையாக அமைய வேண்டும் ? இதிகாசங்களும் இலக்கியங்களும் பன்னெடுங்காலமாக இதுபற்றிக் கூறி வந்திருக்கும் கருத்துக்களை நடைமுறை வாழ்க்கைக்கு எந்த அளவில் நாம் எடுத்துக் கொள்வது ?

செல்விருந்து ஓம்பி, வருவிருந்து பார்த்திருக்க வேண்டுமா ? பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் என்பதற்கு இன்றைய வாழ்க்கைச்

---

*7, 14, 21, 28—9—84 ஆகிய நாட்களில் திருச்சி வானொலியில் 'இன்றைய சிந்தனை' பகுதியில் ஒலிபரப்பானவை. வெளியிட அனுமதி வழங்கிய வானொலி நிலையத்தார்க்கு நன்றி.

சூழலில் என்ன பொருள் கொள்ளலாம்? ஈத்துவக்கும் இன்பம் என்கிறார்களே? அதன் எல்லை எது?

பல்வேறு போராட்டங்களுக்கிடையே கழிந்து கொண்டிருக்கும் மனித வாழ்க்கையில் ஒவ்வொன்றையும் எண்ணியெண்ணியே செயல்பட வேண்டியுள்ளது; அறிவுக்குப் பொருந்தாதவற்றை யெல்லாம் நெஞ்சம் ஒப்புக்கொள்ள மறுக்கின்றது. பல கருத்துக் களை மறு ஆய்வு செய்ய வேண்டிய கட்டாயம் நேர்கிறது.

'தருமம்', 'தருமம்' என்று சொல்லுகின்றார்களே அந்தச் சொல்; அது உணர்த்தும் பொருள்; காலம் காலமாக அதற்குத் தரப்பட்டு வரும் விளக்கம் – இவையெல்லாம் நெஞ்சில் நிழலாடுகின்றன.

இதிகாசக் காலத்துக் கர்ணனும், பழந்தமிழ் இலக்கியங்கள் குறிக்கும் வள்ளல்களும் நம்முன்னே நெடிதோங்கி நிற்கின்றனர். அவர்களுடைய உயர்ந்த செயல்களை எண்ணும்போதெல்லாம் நாம் மெய்சிலிர்த்துப் போகின்றோம்; உண்மைதான். அந்த அளவிற்கு அவர்கள் வள்ளன்மையில் - கொடைத் தன்மையில் சிறந்தவர்கள்; புகழ்வாய்ந்தவர்கள்.

தன்னிடம், பொருள் பெற வந்த வறியவனிடம் இருந்த கைத் தடியை ஓங்கி வீசச் செய்து, அது விழுந்த தொலைவுவரை நின்றிருந்த பசுக்கூட்டத்தை அவனுக்குத் தானமாக வழங்கிய இராமனும்,

மலைமீது ஏறி நின்று கண்ணனுக்கு எட்டிய தொலைவு வரை யில் உள்ள ஊர்களையெல்லாம் கபிலர் என்னும் புலவருக்கு வழங்கிய செல்வக்கடுங்கோ வாழியாதனும்,

புலவர்க்குப் பொன்னும் மணியும், கரியும் பரியும் இன்ன பிறவும் வரையாது கொடுத்த கரிகாலன், நல்லியக்கோடன் போன்றவர்களும் நாடாண்டவர்கள்; பேரரசர்களாகவும் மன்னர்களாகவும் சிற்றரசர்களாகவும் விளங்கியவர்கள்.

குறைவற்ற செல்வம் என்பது அவர்கள் வாழ்க்கைச் சூழல். அவர்கள் எதுவும் செய்யலாம்; எதையும் தாங்கும் வல்லமை உடையதாக இருந்தது அவர்தம் செல்வ நிலை. அவர்களைப் பொறுத்தவரையில், 'வள்ளன்மை' என்பது அரசகுல நியதி என்றும் கொள்ளலாம்.

ஆனால், தனிமனிதர்களைப் பொறுத்தவரையில் தருமம் என்பதன் எல்லை எதுவாக இருக்கமுடியும் - எதுவாக இருக்க வேண்டும் என்பதுதான் இங்கு எண்ணத்தக்கதாகும்.

தனக்கு தனக்கு என்று ஒதுக்காதே – செய்த
தருமம் தலைகாக்கும் மறக்காதே

என்னும் கவிஞர் மாயவவநாதனின் பாடல் வரிகள் நினைவுக்கு வரும் நேரத்தில், அதே கவிஞரின்,

இருக்கு இருக்கு தென்று கொடுக்காதே – பணம்
இல்லாத காலத்தில் தவிக்காதே

என்ற வரிகளும் நினைவில் வந்து நம்மைச் சிந்திக்க வைக்கின்றன.

இவற்றில், எதைக் கொள்ளுவது, எதைத் தள்ளுவது? இரண்டாவதையே பின்பற்றச் சொல்லுகின்றார் வ.உ. சிதம்பரனார் என்னும் வள்ளல்.

தம் வாழ்க்கையில், வ. உ. சி. ஈட்டிய பொருள் எல்லையற்றது. அவ்வளவும் அவர் உழைத்துச் சேர்த்தது. ஈட்டிய பொருளைப் போலவே, அவர் வழங்கிய பொருளும் எல்லையற்றது. வந்ததும் அதிகம்; போனதும் அதிகம். தனக்கென்று வைத்துக் கொள்ளத் தெரியாமல் வாரி வழங்கினார். கால ஓட்டத்தில் குன்று கரைந்தது. அறுசுவை உண்டு பழகியவர் ஒரு சுவைக்கே திண்டாடினார். கொடுத்துச் சிவந்தவர், எடுத்துச் சிவக்கப் பாரெல்லாம் ஓடினார்.

அவர், செல்வமும் செல்வாக்குமாக இருந்த காலத்தில், வந்து வந்து குழைந்தவர்களெல்லாம், விழுந்து விழுந்து பணிந்தவர்களெல்லாம், அவர் அனைத்தும் இழந்து, பிச்சைக்குப் பாரெல்லாம் ஓடிய துன்ப காலத்தில் ஒதுங்கிக் கொண்டனர். யாரோ அந்நியனை அல்லது வேண்டாதவனைக் கண்டுவிட்டது போல முகத்தைச் சுளித்துக் கொண்டு விலகினர்.

"எனது தேயத்தார்களிலும் நண்பர்களிலும் பலர் என்னிடத்தில் வரவும், என்னைக் காணவும், என்னோடு பேசவும் அச்சப்பட்டோ. அச்சப்பட்டதாக நடித்தோ என் நெஞ்சைக் கனக்கச் செய்தனர்" (6 – 6 – 1914)

"கடன் கொண்டும், இரந்துண்டும் சிவனடியானாக வாழ்ந்து கொண்டிருக்கின்றேன்''. (6—6—1914) என்னும் வ. உ. சி. யின் வரிகள் கண்களைப் பனிக்கச் செய்யவல்லன.

படித்தவர், பண்பட்டவர், பொதுவாழ்வில் அனுபவம் நிறைந்தவர். அவர் வாழ்வில் ஏன் இந்த நிலைதடுமாற்றம் ? தம்மை நாடி வந்தவர்களின் முகம் பார்த்து, பசியறிந்து உண்பித்தவர், தம் பசி போக்கப், பிறர் வாயிற்படியில் தவமிருக்க நேர்ந்த கொடுமைக்குக் காரணம் என்ன ? நினைத்தாலே நெஞ்சம் பதறும் இந்த அவலநிலை அந்த வள்ளல் பெருந்தகைக்கு நேர்ந்தது ஏன் ?

அளவு தெரியாத தவறுதான். உழைத்து ஈட்டிய பொருள் என்றாலும், அறவழியில், வந்த பொருள் என்றாலும், அளவொடு பெற்ற செல்வம்தான் என்றாலும், அளவறிந்து வாழத் தெரியாததால் தாய்த்திரு நாட்டிற்குத் தன்னலமற்ற தொண்டு செய்தவராக இருந்தும், அந்தத் தியாகி தம் இறுதிக் காலத்தில் பிச்சைக்குப் பாரெல்லாம் ஓட வேண்டியிருந்தது.

வந்தகவி ஞர்க்கெல்லாம் மாரியெனப் பல்பொருளும்
தந்த சிதம்பரன் தாழ்ந்தின்று -சந்தமில் வெண்
பாச்சொல்லிப் பிச்சைக்குப் பாரெல்லாம் ஓடுகின்றான்
நாச்சொல்லும் தோலும் நலிந்து

தம் தோழர் ஒருவருக்கு எழுதிய கடிதத்தில் தம் நிலை குறித்துத் தாமே நைந்து, வ. உ. சி. எழுதியுள்ள பாடல் வரிகள் இவை.

நல்லவர், ஆனால், வல்லவராக வாழத் தெரியாததால் இன்று நமக்கெல்லாம் ஒரு பாடமாக-எச்சரிக்கையாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார் வள்ளல் சிதம்பரானார்.

பொருள் பெருமை உடையது ; அதை நினைவில் கொண்டு அறவழியில் அதை ஈட்டுவோம். அளவோடு ஈட்டுவோம். நமக்காகவும் பிறருக்காகவும் வாழ்வோம்; அளவறிந்து வாழ்வோம்.

இப்படி ஒரு வாழ்க்கைக்கு நம்மைத் தயார் செய்து கொள்வதை வ உ சி.க்கு நாம் செய்யும் நன்றியாகக் கருதிக் கொள்வோமே ! முடியுமா நம்மால் ?!

(2)

வாழ்க்கையில் நாம் சந்திக்கும் ஒவ்வொரு மனிதனும் நமக்கு ஒரு புதிய அனுபவமாகவே இருக்கின்றான். இவர்களில் பலர் நமக்குக் கற்றுத் தரும் பாடம் எப்படியும் வாழலாம்; எப்படியாவது வாழ்ந்துவிட வேண்டும் என்பதுதான். இப்படித்தான் வாழ வேண்டும் என்று பாதை வகுத்துக் கொண்டு வாழ நினைப்பவர்களைச் சந்திப்பது அரிதாகவே உள்ளது.

நமக்மென்று தனியொரு பாதை வகுத்துக் கொண்டு நடந்து செல்கின்றபோது, இடையில் நேரும் அனுபவங்கள் கசப்பானவை யாகத்தான் இருக்கின்றன. உயர்ந்த சிந்தனைகளோடு இலட்சியப் பயணம் தொடங்க விரும்புகின்றவர்கள் அவற்றையெல்லாம் விழுங்கித்தான் ஆக வேண்டும். அது, தவிர்க்க முடியாதது.

தொல்லைகளும் இடர்களும் மண்டிய பாதையிலல்லவா நடக்கச் சொல்கிறீர்கள்? சலனங்களும் சபலங்களும், தாம் இருப்பதை நினைவுபடுத்திக் கொண்டேயிருக்சம் சிக்கல்கள் நிறைந்த மனித வாழ்க்கையில், நம் இலக்கை அடைதல் இயலுமா? சாதனைகள் நிகழ்த்த முடியுமா?

சலனங்களும் சபலங்களும் சுமைகள். அவற்றை வைத்துக் கொண்டு இலட்சிய உயரங்களைத் தொட முடியாது. அவற்றி லிருந்து விடுபட முயல வேண்டும். முயன்றால், ஆகாதது எது?

வரலாற்று ஏடுகளில் தம் பாதச் சுவடுகளை அழுந்தப் பதித்தவ ரான கௌதமபுத்தர் இங்கு நினைவு கூறத்தக்கவர்.

அரண்மனை வாழ்விலேயே பழகிய கௌதமரின் துறவு வாழ்க்கை எப்படியிருந்தது தெரியுமா?

துறவு வாழ்க்கையில் புத்தர் பிச்சையெடுத்து உண்ண வேண்டி யிருந்தது. வீடு வீடாகச் சென்று தம்முடைய பிச்சைப் பாத்திரத்தில் உணவு வாங்கி வருவார்.

துறவு வாழ்க்கையில் முதல்நாள், தாம் பிச்சை எடுத்துச் சேர்த்த உணவை உண்ணத் தொடங்குகின்றார் புத்தர். பல வீட்டு உணவுகள் கலந்த கலவையாக இருந்தது அது

அதில் ஒரு பிடியை எடுத்து வாயில் வைக்கிறார். உணவு உள்ளே செல்லவில்லை. சுவை நிறைந்த உணவையே உண்டு பழகிய அந்த உயர்குடி இளைஞர், பிச்சை உணவை உண்ண முடியாமல் தடுமாறுகிறார். அரண்மனை வாழ்விற்கும் துறவு வாழ்விற்குமிடையே அவர் மனம் ஊடாடுகிறது,

ஒரு நிமிடம்தான் அந்தத் தடுமாற்றம். நிமிடங்களில் ஏற்படுகின்ற மனஅலைவுகள் தானே வாழ்க்கையையே மாற்றி யமைத்து விடுகின்றன. அன்று, புத்தர் நாவிற்கு அடிமையாகி யிருந்தால், இன்று நம் நெஞ்சங்களில் தம நினைவுச் சுவடுகளை அவரால் பதித்திருக்க முடியாது.

ஆனால், புத்தர் நாவிற்கு அடிமையாகவில்லை. நாவைத் தமக்கு அடிமையாக்கினார். மனத் தடுமாற்றத்திலிருந்து தம்மை மீட்டுக் கொண்டார். துறவு வாழ்க்கையில் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற அடிப்படை உண்மை அவர் மனத்தில் நிலைத்தது; முதலில் கசந்த பிச்சை உணவு, பின்னர் நிறைவுடன் உள்ளே சென்றது.

நினைத்ததும் உலகம் போற்றும் துறவியாக அவர் ஆகிவிட வில்லை. வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் இத்தகைய மனப் போராட்டங்கள் அவருக்கு நேர்ந்திருக்கின்றன. படிப்படியாக அவற்றை வென்று தம்மை அடக்கி நிமிர்ந்தவர்தான் புத்தர் பெருமான்.

உண்மைதான். பின்னாளில், உலகிற்கெல்லாம் அன்புவழியைப் போதித்த அவர், தொடக்கத்தில் சகிப்புத் தன்மையையும், கருணை உணர்வையும் தமக்குத்தாமே போதித்துக் கொண்டார். தம் மனதிலிருந்த வேண்டாத நினைவுகளை யெல்லாம் அகற்றிவிட்டு, அங்கு அன்பையும், அருளையும், பெருந்தன்மையையும் வளர்த்துக் கொண்டார்.

சோதனைகள் நேரும்போதெல்லாம் நல்ல சிந்தனைகளில் மனத்தைத் திருப்பி, சலனங்களையும் சபலங்களையும் வெல்ல வேண்டும் என்பதுதான் புத்தரின் வாழ்க்கைச் செய்தி நமக்குணர்த்தும் அறிவுரையாகும்.

புத்தர் பெரியவர், மன வலிமை வாய்ந்தவர். சாதனைகள் அவரைப் போன்றவர்களுக்கு எளிது. நம்மால் முடியுமா ?

முடியும் என்கிறார் வ. உ. சிதம்பரனார். நம்மால் முடியுமா ? நாம் இதற்குத் தகுதியுடையவர்தாமா ? என்ற தடுமாற்றங் களிலேயே நம நாட்கள் கரைந்துவிடக் கூடாது. உடலாலும் மனத்தாலும் சோர்வுற்றவர்களே இப்படி ஐயுறுவர். யாரும் எதையும் சாதிக்கலாம்.

படிப்படியாகப் பயிற்சி செய்தால், மனம் உங்கள் வயப்படும். "பொறுமை, பயிற்சி, விடாமுயற்சி இவற்றைப் பின்பற்றுங்கள் ; இலக்கை அடைவது எளிது என்பார் வ. உ. சி.

புலன்களின் வயப்பட்டு மனம் போனவாறு வாழாமல், புலன் களைத் தம் வயப்படுத்தியவர் அவர். அப்படி வாழ்ந்ததால்தான், கொடிய சிறைவாசத்தைப் பல்வேறு குற்றவாளிகளுக்கு இடையே

கழிக்க நேர்ந்தபோதும், ஏனைய குற்றவாளிகளின் அவல நிலைக்குத் தாம் தாழ்ந்து விடாமல், அவர்களையும் தம் நிலைக்கு உயர்த்தும் பணியில் அவரால் ஈடுபட முடிந்தது ; ஈடுபட்டு வெற்றி பெறவும் முடிந்தது. வ. உ. சி. யின் சிறை வாழ்க்கை அனுபவங்கள் இதையே நமக்கு உணர்த்துகின்றன.

உண்மைகள் தோற்கும்போதும் நன்றி மறக்கப்படும்போதும் நேர்மையான உழைப்புப் புறக்கணிக்கப்படும்போதும் — எண்ணிய எண்ணியாங்கு எய்துவது இயலுமா ? இயலும் என்பது தான் திண்ணியரான சிதம்பரனாரின் வாதம்.

என்மனமும் என்னுடம்பும் என்சுகமும் என்னறமும்
என்னையும் என்மகவும் என்பொருளும் — என்மணமுங்
குன்றிடினும் யான்குன்றேன், கூற்றுவனே வந்திடினும்
வென்றிடுவேன் காலால் மிதித்து.

என்னும் வ. உ. சி. யின் நெஞ்சக்கனல் நம்மைப் பிணைக்க வல்லது; தடுத்து நிறுத்தும் ஆற்றலுடையது; சிந்திக்க வைப்பது.

எண்ணியதை அடைவது என்பது ஒரு தவம். துணிவோடும், தளரா முயற்சியோடும், இலட்சிய உணர்வோடும் தொடர வேண்டிய பயணம் அது.

இலக்கை அடைந்திட நெடுந்தொலைவு செல்ல வேண்டியிருக் கலாம். வழி நடைப் பயணத்தில் தொல்லைகள் நேரலாம்; இடர்ப் பாடுகள் ஏற்படலாம். சோர்வும் தளர்வும் நேரும்போதெல்லாம், நமக்காகத் தம்மை அழித்துக் கொண்ட சான்றோர்களை நினைவில் கொள்வோம்.

நெஞ்சில் உறுதியோடும், நேர்மைத் திறத்தோடும், வஞ்சனை ஏதுமின்றி,சத்தியத்துணிவோடு பயணத்தைத் தொடர்ந்திடுவோம்; இலக்கை அடைந்திடுவோம்.

(3)

ஓயாத போராட்டக்களுக்கிடையே இலட்சியப் பயணம் நடத்திய வ. உ. சி. வாழ்வில் தாம் அறிந்தவற்றை, தாம் உணர்ந்த வற்றை, தாம் அனுபவித்தவற்றையெல்லாம் நம்மோடு பகிர்ந்து கொள்ளுகின்றார். தம்முடைய எழுத்துக்களின் வாயிலாக.

தம்மைப் பற்றிச் சொல்வதன்மூலம், நம்மைப் பற்றிச் சிந்திக்க வைக்கிறார். எப்படி வாழ வேண்டும், எப்படி வாழக் கூடாது என்பதையெல்லாம் நமக்குப் புரிய வைக்கின்றார்.

அப்படி என்னதான் சொல்லுகிறார் வ. உ. சி.? ஆசையை ஒழிக்கச் சொல்லுகிறார். இது ஒன்றும் புதிதல்லவே. பலநூறு ஆண்டுகளாகப் பலரும் சொல்லிச் சொல்லிப் பழகிய பழங்கதை யாயிற்றே!

செய்தி ஒன்றுதான். ஆனால் சொல்லுகின்ற முறையில்தான் வ. உ. சி. வேறுபட்டு நிற்கின்றார். அறிவுரையாகச் சொல்லாமல், அனுபவமாகச் சொல்லுகிறார். இதைச் செய்யாதே என்று சொல்லாமல், இதைச் செய்தால் இன்னது வரும் என்று தன் அனுபவத்தைச் சொல்லி எச்சரிக்கின்றார். அறிவோடு அனுபவம் சேர்த்து அவர் கூறும் செய்திகள் நம்மை வழிப்படுத்த வல்லன.

தீமைகள் மலிந்த உலக வாழ்க்கையில் எந்த ஒன்றிலும் ஆசை கொள்ள வேண்டாம் என்பது வ. உ சி.யின் அறிவுரை.

மலிந்த வாழ்க்கைக்கு எவை அடிப்படை? ஆசையும், நம்பிக்கை யுமே அடிப்படை. சராசரி மனிதனை ஆசைதான் வழிநடத்துகிறது. அவன் தவறுகளுக்கெல்லாம் அதுவே காரணமாகிறது.

'இவ்வளவு போதும்' என்று எண்ணுகின்ற நெஞ்சு, அது கிடைத்ததும், அடுத்த கட்டத்திற்குத் தாவுகிறதே, அது ஏன்?

அதுதான் ஆசையின் இயல்பு. ஆசை என்னும் தாகம் ஏற்படும்போது, 'இன்னும் இன்னும்' என்னும் வேட்கைதான் அதிகமாகுமே அல்லாமல், அந்தத் தாகம் தீர்வதில்லை என்பது வ.உ.சி.யின் வாக்கு.

ஆசை கொண்ட மனம் ஒருபோதும் அடங்குவதில்லை. விரும்பியது கிடைத்தாலும், 'போதாது போதாது' என்று வாழ்க்கை முடியும் வரையும் அது, தீராத வேட்கையுடன் அலைந்து கொண்டிருக்கும்.

ஆசைப் படுகுழியில் வீழ்ந்தவர்களை, ஆசையின் அலைக்கழிப்புக்கேற்பத் தம் பாதைகளை மாற்றியமைத்துக் கொண்டவர்களை இரக்கத்துடனும் அனுதாபத்துடனும் நோக்கு கிறார் வ.உ.சி. நிறைவேறாத ஆசைகளும் நிறைவடையாத நெஞ்சங்களுமே அவரின் உடமைகள். அவர்தம் ஆசையே அவர் களுக்குக் காலன். இதைப் புரிந்து கொள்ளாமல் விட்டில்களாக மாய்கிறார்களே என்று வருந்துகிறார்.

நாம் படித்து மறந்த சில கதைகளை இங்கு நினைவு கூர்வது பொருந்தும். 'பொன்முட்டையிடும் வாத்'தின் கதையும், 'தொட்ட தெல்லாம் பொன்னாக வேண்டும்' என்று வேண்டி, வரம்பெற்றுத் தவித்த வேந்தனின் கதையும் நமக்குப் புதிதல்லவே.

பொன்முட்டைகளுக்கு ஆசைப்பட்டு, வாத்தைக் கொன்று, அதனால்,உள்ளதையும் இழந்துநின்ற அந்தப் பாமரனும், தொட்ட தெல்லாம் பொன்னாக வேண்டும் என்று ஆசை ஒன்றையே அடிப்படையாகக் கொண்டு, வரம் பெற்று, அதன் விளைவாகத் தொட்டதெல்லாம் பொன்னாக-உண்ணும் உணவு-மனைவி மக்கள் உட்பட எல்லாமே பொன்னாக மாற, செய்வதறியாது திகைத்து நின்ற - தன்னைத்தானே அழித்துக்கொண்ட மன்னனும் நம் முன்னோர்கள் கதைகளின் வழி நமக்குத் தந்த எச்சரிக்கைகள்.

ஆசையென்னும் போர்க்களத்தில் தோற்றவர்களே மிகுதி. என்றாலும், வென்றவர்களும் உண்டு. ஆசையின் வலைப்பட்டு அழிந்தவர்கள் நமக்கு எச்சரிக்கைகள் ஆகின்றனர்; ஆசையை வென்று அடக்கியவர்கள் நமக்கு வழிகாட்டிகளாகின்றனர்.

இருவரையும் நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் என்கிறார் வ. உ. சி. வழிகாட்டிகள் நாம் செல்ல வேண்டிய பாதையையும், தடுமாறியவர்கள் செல்லக் கூடாத பாதையையும் தெளிவுபடுத்துகின்றார்கள் என்பது அவர் தரும் விளக்கம்.

ஆசை காட்டும் பாதையில் பயணம் செய்ய வேண்டாம் என்பதே வ. உ. சி. கூற விரும்புவது. இதைப் புறக்கணித்தால், ஆசையின் வயப்பட்ட பலருக்கும் நேர்ந்த அழிவே நமக்கும் நேரும் என்பது அவர் தரும் எச்சரிக்கை.

பற்றற்று வாழப் பழகிக் கொள்ள வேண்டும் என்பதே இதற்குரிய விளக்கம்.

சலனங்களுக்கும் சபலங்களுக்கும் ஆட்படாதிருப்பதே பற்றற்ற வாழ்க்கையாகும்.

ஆசைமேல் ஆசை வைக்காதிருக்கப் பழகிக் கொள்வோம். ஆசைகள் அற்ற இடத்தில் குற்றங்கள் அற்றுப் போகின்றன.

(4)

எது வழிபாடு? அவி சொரிந்து ஆயிரம் வேட்டலா? தனக்குவமை இல்லாதவனின் தாள் சேர்வதற்கு என்ன செய்ய வேண்டும்? வேள்விகளும், பிரார்த்தனைகளும், மந்திரங்களும் மட்டும் போதுமா?

இவற்றாலெல்லாம் அவனை மகிழச் செய்துவிட முடியுமா? இறைவன் எங்கே இருக்கின்றான்? ஆரவாரங்களிலும், ஆர்ப்பாட்டங்களிலுமா?

இந்தக் கேள்விகளின் நாயகர் யார்? அவர்தான், பக்தியில் தோய்ந்தவரும், இறை உணர்வில் ஆழ்ந்த நம்பிக்கை உடையவருமான சிதம்பரனார்.

அவரிடமிருந்தா இப்படிப்பட்ட வினாக்கள்! அப்படியானால், எதுதான் வழிபாடு? என்னதான் சொல்லுகிறார் வ. உ. சி.?

'உயிர்களுக்கு உதவுதலே கடவுளை ஆராதித்தல்' ஓ...! மனிதர்களை நேசிக்கச் சொல்லுகிறாரோ? மக்கள் சேவையே, மகேசன் சேவை என்கிறாரா? உலகத்து உயிர்களையெல்லாம் அன்புடனும் கருணையுடனும் அருளுடனும் அணுகப் பழகுங்கள் என்று சொல்லுகின்றாரோ? உயரிய சிந்தனைதான். ஆனால், வாழ்க்கையில் இதையெல்லாம் நடைமுறைப்படுத்த முடியுமா?

'முடியும், முடிய வேண்டும்' என்பதுதான் தத்துவத்திலும் பக்தியிலும் தோய்ந்த சிதம்பரனாரின் விழைவு.

மனிதனின் உணர்ச்சிகள் மதிக்கப்பெறாதபோது, அவன் வேதனைப்படுகின்றான். வாழ்க்கையில் துன்பப்படும் ஒவ்வொரு மனிதனும் அனுதாபத்துடன் நோக்குதற்குரியவனே. ஆனால், அறிவிலே ஏற்றத்தாழ்வு, வாழ்க்கை வசதிகளிலே ஏற்றத்தாழ்வு என்று எதிலும் ஏற்றத்தாழ்வைப் படைத்துக் கொண்ட மனிதன், அன்பு காட்டுவதிலும் ஏற்றத்தாழ்வை நுழைந்துவிட்டான். வேண்டாதவர்களின் உணர்ச்சிகள் மதிக்கப்படுவதில்லை.

தம் வாழ்வின் பெரும்பகுதியைப் போராட்டங்களிலேயே கழித்தவரான வ. உ. சி. அனுபவித்த துன்பங்கள் அளவற்றவை; சந்திக்க நேர்ந்த புறக்கணிப்புகளும் அவமதிப்புகளும் கணக்கற்றவை.

அவருடைய உணர்ச்சிகளை மதிக்கத் தெரிந்தவர்கள், அவரை மனிதராக நடத்தத் தெரிந்தவர்கள் தொலைதூரத்திற்கு ஒருவராகவே அவருடைய வாழ்க்கைப் பாதையில் எதிர்ப்பட்டனர்.

"அந்த ஒரு சிலர் என் மதிப்பில் உயர்ந்தோங்கி நின்றார்கள்; என் அன்பிற்குரியவர்களானார்கள்; அவர்களோடு நான் என்னை இணைத்துக் கொண்டேன். அவர்களின் அன்பு எனக்கு இதமாக இருந்தது" – இது, வ. உ. சி. யின் குரல்.

நாம், விழித்தெழ வேண்டும்; மற்றவர்களின் உணர்ச்சிகளை மதிக்க வேண்டியதன் அவசியத்தை உணர வேண்டும்; அடுத்தவர் பிரச்சனைகளை அணுகும்போது, அனுதர்பத்துடனும் பரிவுடனும் இரக்கத்துடனும் அணுகவேண்டும் என்பதுதானே வ. உ. சி யின் எதிர்ப்பார்ப்பாக இருக்க முடியும் ?

மனிதனை மனிதன் மதிப்பதும் நேசிப்பதுமே இறை வழிபாடு. துயருற்ற ஒருவனைச் சந்திக்க நேர்ந்தால், இயன்றால் அன்பு காட்டுங்கள்; இயலாது என்றால்,விலகி நில்லுங்கள்; இரண்டையும் கடந்து, கேலி பேசி, கேவலப்படுத்தி, சங்கடத்தில் ஆழ்த்தாதீர்கள் என்பதே வ. உ. சி. நமக்குக் கூறும் செய்தி.

அன்பு, அருள், நல்லொழுக்கம் இவற்றின் மலர்ச்சியே சமய வாழ்வு. பிறருக்குத் தொண்டு செய்வதே சமய வாழ்வின் அடிப்படை.

சமயம் வளர வேண்டுமாயின், மக்களுக்குச் செய்யும் தொண்டினால்தான் வளர முடியும் என்பது வ. உ. சி. யின் கருத்து.

தொண்டுணர்வும் அன்புணர்வும் பெருகினால்தான் மனிதர் களுக்கிடையே நட்பும் நேயமும் வளரமுடியும். அவை, வளர்ந்தால் தான் மனித வாழ்க்கை முழுமையடைய முடியும் என்று நம்பினார் வ. உ. சி.

அவர் கூறும், "உயிர்களுக்கு உதவுதலே கடவுளை ஆராதித்தல்" என்பது இதைத்தான் உணர்த்துகின்றது.

முத்தும் முத்தமிழும்

முத்துக் குளிப்போனினும் முத்தமிழ்க் குளிப்போன் செய்யும் சிறந்த செயல் அழுக்கடைந்த சிப்பிகளில் அடங்கிக் கிடக்கும் முத்துக்களை மட்டும் வாரிக் கொட்டுவதோடு அமையாமல், முத்துமாலைகளையோ-முத்துப்பதக்கங்களையோ,முத்துத்தோடு களையோ முத்துமூக்குத்திகளையோ செய்துதரும் அணிகலக் கலைஞனாகவும் அவன்திகழ்கிறான். ஆம். எடுப்பவனும், தொடுப்பவனும், கொடுப்பவனும் அவனே.

டாக்டர் ந. சஞ்சீவி, இலக்கிய இயல் அ. ஆ (1974), பக். 53–54.

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

பல்லவர் கால இலக்கியங்களில் சமுதாயம்

பா. மதிவாணன்

அக் காலத்தில் வடமொழியே இந்தியப் பொதுமொழி என்னு மளவில் கடிகைகளிற் கற்பிக்கப்பட்டு மேல் மட்டத்துச் செல்வாக்குப் பெற்றிருந்தது. மேலும் சைவவைணவங்கள் வைதிகச் சமயங்கள் என்பதனை நினைவில் நிறுத்துதல் நலம்.

"நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி
நற்கனகக் கிழிதருமிக் கருளினோன் காண்"

என அப்பர் பிறவாயாக்கைப் பெரியோனைச் சங்கத்தோடு தொடர்பு படுத்திப் பாடுகிறார். 'சங்கத்தமிழ்' 'கூடலின் ஆய்ந்த ஒண்தீந் தமிழ்' – என்றெல்லாம் தமிழ்ச் சங்கம் சுட்டப்படுகிறது. சங்கப் பாடல்களிலும், மணிமேகலையிலும் புலவர் கூடியிருந்த சங்கம் பற்றிச்சில குறிப்புக்கள் உள்ளன. ஆனால் அஃது இறைவனோடு தொடர்பு படுத்தப்பட்டது இக்காலத்தில் தான். இச்சங்கம் சில உண்மைகளின் அடிப்படையில் எழுப்பப்பட்ட மாயை (Illusion) என ஆய்வாளர் விளக்கியுள்ளனர். சமணர்தம் புகழ்பெற்ற வச்சிர நந்தி தொடங்கிய திராவிட சங்கத்திற்கு எதிராகவே இக் கதைகள் எழுந்தன என்பர்.[23]

சமணச் செல்வாக்கின் எச்சங்களைச் சைவர் தமக்குச் சாதக மாக்கிக் கொண்டமை பற்றி முன்பே கூறப்பட்டது. தமிழ்ச்சங்கம் பற்றிய புனைவும், புராணமும் அவ்வகையினதே.

உருவமும் உள்ளடக்கமும் :

பக்தி இயக்கஞ் சார்ந்த இலக்கியங்களின் உள்ளடக்கத்தில் எற்பட்ட மாற்றங்கள் உருவிலும் காணப்பட்டன. இலக்கிய நோக்கிற்கேற்ப உள்ளடக்கமும், உள்ளடக்கத்திற்கேற்ப உருவமும் அமைதல் இயல்பே.

"நாலாயிரமும் திருமுறைகளும் பாடற்பொருள் அளவிலேயே இயைந்து செல்கின்றன என்பதன்று; அவற்றின் இலக்கிய வடிவங்களும் (செய்யுள் வகைகள்) பெரிதும் ஒன்று போலவே உள்ளன."[24] – என்பது முன்பு கூறிய கருத்துக்கு அரணாகிறது.

எல்லோர்க்கும் புரியும் எளிய தமிழில் பாடல்கள் பாடப்பட்டன. பக்திப் பாடல்களில் சிற்றிலக்கியங்கள் பலவற்றின் தோற்றத்தைக் காண்கிறோம். நாட்டுப் பாடல் மரபுகளை மாணிக்கவாசகர் பெரிதும் பயன்படுத்திக் கொண்டார்,

தலைவன்-தலைவிப் பாங்கில் (நாயக - நாயகி பாவத்தில்) இறைவனைப் பாடும் மரபைப் பக்தி இயக்கக் கவிஞர்கள் தமிழுக்கு அறிமுகம் செய்தனர். (சமண பௌத்தர் இங்ஙனம் பாடியதாகத் தெரியவில்லை.) "இந்தக் கொள்கைக்கு ஆதாரமான நூல் வேண்டியிருந்தது. அந்த ஆதார நூல்தான் 'இறையனார் அகப்பொருள் என்னும் களவியல் நூல்"[25] என்பர். தமிழ்ச் சங்கத்தை முழுநிறுவனமாக்கிக் காட்டியது இந்நூலுரையே என்பதும் குறிப்பிடத் தக்கது.

"தமிழோடிசை பாட மறந்தறியேன்'' என்றார் அப்பர். "வலம் வந்த மடவார்கள் நடமாட முழவதிர"த் திருவையாறு கலைக் கோலம் பூண்டதைப் பாடுகிறார் சம்பந்தர். இங்ஙனம் சைவர்களால் இசையும், கலையும் போற்றப்பட்டன. சமணரால் நுணுக்கமாக அறியப்பட்ட - ஆனால் வெறுக்கப்பட்ட - கலையுணர்வை நாயன்மார்கள் பெரிதும் வரவேற்றனர். கோயில்களே கலை நிலையங்களாக விளங்கின. கடுந்துறவு, நோன்பு, புலனடக்கம் போன்றவற்றை வற்புறுத்திய சமண பௌத்தங்கட்குமாறாக.

"நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே
புக்கு நிற்பன் பொன்னார்சடைப் புண்ணியன்" -என்றனர்.

இஃதோர் எளிய வழியாயிற்று. வைதிகச் சமயத்தர் பெண்களும் வீடு பேறடையலாம் என்றனர்; காரைக்காலம்மையார், ஆண்டாள் போன்றோர் பெற்றுள்ள சிறப்புகளே இதற்குச் சான்று. சமணர் பெண்களை இழிவு படுத்தினாரல்லரெனினும் அவர்கட்கு வீடுபேறில்லையென்றனர்.

"இந்திய தத்துவங்கள் பலவற்றிற்கும் பொதுவான கொள்கைகளில் நிலையாமைக் கோட்பாடும் ஒன்றாகும்."[26] எனினும் உலகியல் தேவைகளையொட்டியே பக்தி இலக்கியத்தில் பல இடங்கள் உள்ளன.

"இம்மையே தரும்சோறும் கூறையும் ஏத்தலாம் இடர்
கெடலுமாம்
அம்மையே சிவலோக மாள்வதற்கு யாதுமையுறவில்லையே"

எனச் சுந்தரர் பாடுகிறார். திருமங்கையாழ்வார், நாராயணாவென்னும் நாமம்

"குலந்தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுயர் ஆயின வெல்லாம்
நிலந்தரம் செய்யும் நீள்விசும் பருளும்
அருளொடு பெருநிலம் அளிக்கும்" -என்கிறார்,

பக்தி இயக்கமும் விளைவுகளும் :-

பல்லவர் காலச் சமுதாயத்தின் பல்வேறு கூறுகளில் பக்தியியக்கமும் ஒன்று. பக்தி இயக்கத்தின் வெளிப்பாடாயமைந்த பாடல்கள் சமயப் போரில் ஆயுதங்களாக விளங்கின. அப்பாடல்களனைத்துமே சமுதாய - சமயப் போராட்டத்தின் விளைவான - எதிரொலிகளே. பக்தி இயக்கத்தின் பின் சைவசமயம் பெரிதும் வளர்ந்து நிற்கிறது; பௌத்தம் பேரளவு வீழ்ச்சியடைகிறது; சமணம் ஓரளவு ஆங்காங்கு காணப்படுகிறது.

பக்தி இலக்கியங்களுக்குச் சமயப்போர் காரணமாயிற்று. அச்சமயப் பூசலுக்கு வேறு காரணம் உண்டா? உண்டு என்பர் க. கைலாசபதியவர்கள்.

> பெரும்பாலும் சமணராக விருந்த வணிக வர்க்கத்தினருக்கும், வைதிகர்களாக (சிறப்பாகச் சைவராக) இருந்த நிலவுடைமை வர்க்கத்தினருக்குமிடையே ஏற்பட்ட இப்பொருளாதார முரண்பாட்டினை அக்காலத்திற்றோன்றிய "பொருளாதார நெருக்கடி" என்று பொருளாதார வார்த்தைகளிற் கூறிக் கொள்ளலாம்.... பல்லவர் காலத்திலே சமணத்தைச் சாடுவதன் மூலம் வணிக வர்க்கத்தினரிடமிருந்து பொருளாதாரத் தலைமையையும்,சமுதாயச்செல்வாக்கையும் பிடுங்கிக்கொண்ட சைவர்கள், பல்லவராட்சிக் காலத்தின் இறுதியிலும், அடுத்து வந்த சோழராட்சிக் காலத்திலும் எத்துணைச்செல்வாக்குள்ளவராக விளங்கினர் என்பதனையும், அந்நிலையின் உடனிகழ்ச்சியாகச் சிறுகைத்தொழில் உழவுத்தொழில் முதலியவற்றின் வளர்ச்சிக்கு எவ்வாறு அடிகோலினர் என்பதனையும் அக்காலத்துக்குரிய கல்வெட்டுக்களால் நாம் திடமாக அறிகின்றோம்.[27]

என்பது அவரது ஆய்வுமுடிவு. இத்தகைய வர்க்கப்போராட்டத்தின் பிரச்சாரக் கருவியாக எழுந்ததே பக்தி இலக்கியங்கள் என்கிறார் க. கைலாசபதி.

தூய்மையும் சார்பும் :

இலக்கியங்களைத் தூய இலக்கியம் (Pure literature) எனவும் சார்பிலக்கியம் (Applied literature) எனவும் பகுப்பர். சமுதாய நோக்கில் இப்பகுப்புப் பொருந்துவதன்று. ஏதேனும் ஒரு வகையில் - உடன்பாடாகவோ, எதிர்மறையாகவோ, தப்பிச்செல்லும் பாங்கிலோ (Escapism) சமுதாயச் சார்பு இருந்தே ஆகவேண்டும்.

"இயற்றும் காலத்தில் சார்பு இலக்கியமாகத் தோன்றியவை, பின்னர்க் காலப்போக்கில் நேர் [தூய] இலக்கியமாக வாழ்தல் உண்டு"[38] என்பர். சில சூழல்களில் அப்பண்டை இலக்கியங்களே கூட இக்காலத்தின் ஒரு சார்பாருக்குக் கருவியாதல் உண்டு.

பக்தி இலக்கியங்கள் உலகியல் வட்டத்திலிருந்து பாடப் பட்டவையன்று என்பது முதலாகப் பக்தியியக்கமே தமிழகத்தின் பொருளாதாரநெருக்கடி, {முரண்பாடுகளின் விளைவு என்பது ஈறாகப் பல்வேறு நிலைகள் படிப்படியே விளக்கப்பட்டன.

சமுதாயத்தை எவ்வகையிலேனும் எதிரொலிக்காத இலக்கியங்கள் இல. எனினும் அவை சமுதாயத்தை உள்ளவாறே படம் பிடித்துக்காட்டா. அவற்றின் சார்புக்கும், தேவைக்குமேற்பவே சமுதாயத்தைக் காட்டும். இவற்றின் அழகியல் தன்மைக்கேற்ப இவற்றின் இலக்கியத் தகுதியும் அமைகிறது.

முடிவுரை

இலக்கியங்களினின்றும் வரலாற்றுக்குரிய சான்றுகளை எடுத்துக்காட்டுதல் வேறு; இலக்கியம் வரலாற்றின் ஒரு கட்டத்தில் சமுதாயநிலையில் எத்தகைய எதிரொலிப்பை ஏற்படுத்தியுள்ளது எனக் காண்பது வேறு. பல்லவர் காலப் பக்திப் பாடல்களில் வரலாற்றுச் சான்றுகள், பண்பாட்டுச் செய்திகள் பலவுள. ஆயின் பல்லவர் கால இலக்கியங்கள் அக்காலச் சமுதாய நிலையை வெளிப்படுத்தும் பாங்கே-உருவம், உள்ளடக்கம், உணர்த்துமுறை எனும் அடிப்படைகளில்-ஈண்டு விவரிக்கப்பட்டுள்ளது.

குறிப்புகள் :-

1. மா. இராச மாணிக்கம் பிள்ளை, **பல்லவர் வரலாறு**, கழக வெளியீடு, மே 1968, ப. 77.
   K.K. பிள்ளை, **தமிழக வரலாறு-மக்களும் பண்பாடும்**, தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, ஆகஸ்ட் 1975, ப.189.
2. மா. இராசமாணிக்கம் பிள்ளை, மு.நூ, ப. 53.
3. மயிலை. சீனி. வேங்கடசாமி, **பௌத்தமும் தமிழும்**, கழக வெளியீடு, சென்னை, அக்டோபர் 1950, ப. 53.
4. மயிலை. சீனி. வேங்கடசாமி, **சமணமும் தமிழும்**, கழக வெளியீடு, சென்னை, ஆகஸ்ட் 1970, ப. 50.

5. கே. வி. இராமன், **தொல்லியல் ஆய்வுகள்**, சேகர் பதிப்பகம், சென்னை, ஆண்டு இல்லை, ப. 151.

6. K.K. பிள்ளை, மு.நூ., ப. 192.

7. மயிலை. சீனி. வேங்கடசாமி, **சமணமும் தமிழும்**, ப. 44.

8. மா. இராச மாணிக்கம் பிள்ளை, மு. நூ., ப. 231.

9. ப. அருணாசலம், **பக்தி இலக்கியம்**, தமிழ்ப் புத்தகாலயம் [வி.உ], சென்னை, அக்டோபர் 1973, ப. 90.

10. க.ப அறவாணன் **கவிதையின் உயிர் உள்ளம் உடல்**, பாரி நிலையம் [வி.உ], சென்னை, 1976,பக்132-133.

11. மா. இராசமாணிக்கம் பிள்ளை, மு.நூ.,ப.198.,K.K.பிள்ளை மு.நூ., பக் 224-225 [இரண்டாம் நந்திவர்மன் என்பர்].

12. சோ.ந. கந்தசாமி, **தமிழும் தத்துவமும்**, மணிவாசகர்நூலகம், சிதம்பரம். 1976, ப.86.

13. மயிலை. சீனி. வேங்கடசாமி, **சமணமும் தமிழும்**, பக்66-67.

14. ப. அருணாசலம், மு நூ., ப.76.

15. மயிலை. சீனி. வேங்கடசாமி, **சமணமும் தமிழும்**, பக் 188-192.
மேற்படி, **பௌத்தமும் தமிழும்**, பக் 62; 65-73.

16. மேற்படி, மேற்படி, ப. 60.

17. சோ ந. கந்தசாமி, மு.நூ. ப. 88.

18. மயிலை. சீனி வேங்கடசாமி, **சமணமும் தமிழும்**, பக்77-97.

19. மயிலை. சீனி. வேங்கடசாமி, சமணமும் தமிழும், ப. 41.
மேற்படி, பௌத்தமும் தமிழும் ப. 31.

20. ப. அருணாசலம், மு. நூ., ப. 170.

21. K. K. பிள்ளை, மு. நூ., ப. 216.

22. க. ப. அறவாணன், மு.நூ., ப. 150.

23. கோ. கேசவன், **மண்ணும் மனித உறவுகளும்**, கென்னை புக் ஹவுஸ், சென்னை, (முதற்பதிப்பு) டிசம்பர் 1979. [இந்நூலில் உள்ள 'மாயையும் உண்மையும்' (பக் 95-147) எனும் கட்டுரையில் விரிவாக ஆய்ந்துள்ளார்.]

24. ப. அருணாசலம், மு. நூ., ப. 172.

25. மயிலை. சீனி. வேங்கடசாமி, களப்பிரர் **ஆட்சியில் தமிழகம்,** மக்கள் வெளியீடு, சென்னை, செப்டம்பர் 1976, ப. 90.

26. சோ. ந. கந்தசாமி, மு. நூ., ப. 80.

27. க. கைலாசபதி, **பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும்,** மக்கள் வெளியீடு, சென்னை, செப்டம்பர் 1978, ப. 111. ['நாடும் நாயன்மாரும்', — எனும் கட்டுரையில் இக் கருத்து விரிவாகவும், தெளிவாகவும் விளக்கப்பட்டுள்ளது (பக் 91-130.)]

28. மு. வரதராசன், **இலக்கியமரபு,** பாரி நிலையம் [சீ. உ] சென்னை, மார்ச் 1960, ப. 39.

தமிழில் ஆய்வேடு

ஆய்வேட்டின் இறுதிப் படியை முற்றிலும் பிழையின்றி உருவாக்க வேண்டும். ஒரு சிறு பிழை கூட இருத்தல் கூடாது. தட்டச்சுப்பிழை என்று தப்பித்துக்கொள்ள நினைக்கக்கூடாது. தப்பிக்க முடியாது. சந்திப்பிழை, நிறுத்தற் குறிப்பிழை முதற் கொண்டு ஏற்பட்டு விடாமல் காக்க வேண்டும். ஆங்கிலத்தில் இவற்றை அக்கறையாக மேற்கொள்ளுபவர்கள் கூடத் தமிழில் ஆய்வேடு எழுதும் பொழுது சிறு சிறு 'பிழைகள் தானே' என்று புறக்கணித்து விடுகின்றனர். தமிழில் எப்படியும் எழுதலாம் என்ற மனப்போக்குத் தடித்துப் போயிருக்கிறது. ஆங்கிலத்தில் சிறுபிழை செய்தாலும் அங்ஙனம் பிழை விட்டவர்கள் கேலிக்குரியவர்கள் ஆகின்றனர். அவர்கள் தாம் செய்த பிழைக்கு நாணப்பட வேண்டியிருக்கிறது. தமிழில் பிழை என்று தண்டு சொன்னால், அங்ஙனம் சொன்னவர்களைப் பிழைசெய்தவர்சள் கேலி பேசுகின்றனர்! அங்ஙனம் பிழை செய்தவர்கள் தலை நிமிர்ந்து நடந்து, பிழை காண்பவர்கள்தான் வெட்கப்பட வேண்டுமோ என்ற ஐயத்தை விளைவித்து வருகின்றனர்.

- டாக்டர் தமிழண்ணல், டாக்டர். மா சு.இலக்குமணன்,
ஆய்வியல் அறிமுகம் (1979), ப. 161.

2. கற்பனையால் ஆம் கட்டு.

டாக்டர். மொ. அ. துரை அரங்கசாமி, எம்.ஏ.,எம்.ஓ.எல்., பிஎச்.டி.,

கற்பனை

மறை முடிவுகளெல்லாம், உயிர்கட்குக் கட்டு அல்லது தளை ஏற்படுவது, கற்பனையால்தான் என்று கூறுகின்றன.

கட்டு எனினும், தளை எனினும், பந்தம் எனினும் ஒக்கும்.

கற்பனை எனினும், ஆரோபம் எனினும், அத்தியாசம் பிராந்தி எனினும் ஒக்கும்.

'ஆரோபத்தால் பந்தமாம்', என்பது கைவல்ய நவநீதம். 'மித்தையாம் ஆரோபம்', என்பதும் அது.

ஒரு பொருளில் வேறொரு பொருளை உணர்தல் கற்பனை எனப்படும்.

"ஆரோபம் அத்தியாசம் கற்பனை ஆவ எல்லாம் ஒரோர் வத்துவினில் வேறே ஒரோர் வத்துவினை ஓர்தல்", என்பது கைவல்ய நவநீதம்.

ஒரு பொருளில் மற்றொரு பொருள் தோன்றுதலும் கற்பனை அல்லது அத்தியாசமாம்.

அதிஷ்டானத்ததின் விஷம (வேறான) சத்தின் அவபாசம் (தோற்றம்) அல்லது தனது அபாவ அதிகரணத்தில் (இடத்தில்) அவபாசம் அத்தியாசமாம் (பிராந்தியாம்).

அதிஷ்டானம் என்பது கற்பனைப் பொருளை உணர்தற்கு அல்லது கற்பனைப் பொருள் தோன்றுதற்கு இடமான பொருள். கயிற்றில் கற்பனைப் பொருளான பாம்பை உணரும்போது, கயிறு பாம்பிற்கு அதிஷ்டானமாம். கயிற்றில் பாம்பு தோன்றும்போது கயிறு ஓர் உள்பொருளாம். பாம்பு மற்றொர் உட்பொருளாம். ஆனால், கயிறு நிலையான உள்பொருளாம் ; பாம்பு மித்தையான (பொய்யான) உள்பொருளாம். ஆராயாதபோது தோன்றி ஆராயும் போது மறைந்து போகும் உள்பொருள் மித்தையான உள் பொருளாம். உள்பொருள் எனினும்,சத்து எனினும் ஒக்கும். எனவே, அதிஷ்டான சத்துப் பொருளாகிய கயிற்றின் வேறுபட்ட சத்துப் பொருள் பாம்பு எனப்பட்டுள்ளது.

அபாவம் எனினும் இன்மை எனினும் ஒக்கும். உண்மையில் கயிற்றின் பாம்பு இல்லை. எனவே, கயிறு, பாம்பின் அபாவ அதிகரணமாம் (இடமாம்). அவபாசம் எனினும் தோற்றம் எனினும் ஒக்கும். பாம்பின் இன்மையான இடமான கயிற்றில், அப்பாம்பின் தோற்றம் அத்தியாசம் அல்லது கற்பனையாம் என்று உணர்தல் வேண்டும்.

"மித்தையாம் ஆரோபத்தால் பந்தமாம்" என்ற கைவல்ய நவநீதம். "அபவாதத்தால் முத்தியாம்" என்று உடன் கூறுகின்றது.

அதிஷ்டான சேஷம் (அதிஷ்டானம் மாத்திரம் எஞ்சி நிற்றல்) அபவாதமாம் (தெளிவாம்).

கயிற்றில் மித்தையாத் தோன்றிய பாம்பு, ஆராய்ந்த வழி, அது மறைந்தவிடத்துக் கயிறு மட்டும் எஞ்சி நிற்பதாம். கயிற்றைப் பாம்பாக மருண்ட மருட்சி, கயிற்றைக் கயிறாக உணர்ந்தபோது நீங்கத் தெளிவு உண்டாவதாம். இதுவே அபவாதமாம்

ஆரோபமாகிய கற்பனைப் பொருள் தோன்றும் போது அதற்கு இடம் அல்லது அதிஷ்டானமாகிய உள்பொருள் மறைந்து நிற்கும். அதனால், மருட்சி அல்லது கலக்கம் உண்டாம். ஆராய்ச்சியால் கற்பனைப் பொருள் நீங்கியபோது அதிஷ்டானப் பொருள் விளங்கி நிற்கும். அதனால் தெளிவு உண்டாம்; மருட்சி அல்லது கலக்கம் நீங்கும்.

அரவு இன்மையான கயிற்றினிடத்து அரவு தோன்றுதலும், கள்வன் இன்மையான தறியினிடத்துக் கள்வன் தோன்றுதலும், நீர் இன்மையான கானலிடத்து நீர் தோன்றுதலும், நீல நிறமும் கொப்பரை கவித்தாற் போன்ற இடமும் இன்மையான வானத்திடத்து நீல நிறமும் கொப்பரை கவித்தாற் போன்றுள்ள இடமும் தோன்றுதலும் பிறவும், ஆரோபம் அல்லது கற்பனைக்கு எடுத்துக் காட்டுக்களாம்.

கயிறு முதலியவற்றின் கண், அரவு முதலியவை தோன்றுதல் போன்று ஒரு பெயரும் ஒரு வடிவமும் தன்பால் இல்லாது, ஒப்பமாயும் (சமமாயும்) இரண்டற்று ஒன்றாயும் (அத்துவிதமாயும்), உணர்வொளியாயும் (ஞானப்பிரகாசமாயும்), நிறைவாயும் (பூரணமாயும்) இருக்கின்ற அந்தப் பெரிய பொருளாகிய கடவுள் இடத்தில் (பிரஹ மத்தினிடத்தில்) தோன்றும் பெயர் வடிவமான ஐம்பூத வடிவ காரியங்கள் யாவும் கற்பனையினால் (ஆரோபத்தினால்) உண்டாயின என்று அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

தோற்றவொடுக்கம் தோற்றம்

அஃது எப்படியென்றால், படைப்பிற்கு (சிருஷ்டிக்கு) முன்னர் அநாதியான (தோற்றம் அல்லது உற்பத்தியின்றியுள்ள) உயிர்களெல்லாம் (ஜீவ கோடிகளெல்லாம்) பொதுவான (சர்வ சாதாரண அநுபவமான சுழுத்தி நிலையைப் போன்று, பெயர் வடிவங்களாக வெளிப்படாத நிலையில் உள்ள மாயையில் (அவ்வியக்கத்தில்) வினைப்பயன்களின் பதிவுகளுடன் (கரும வாசனைகளுடன்) ஒடுங்கியிருக்கும் (லீனமாயிருக்கும்). அப்போது, அவ்வுயிர்களின் வினைப் பயனது பக்குவத்தைச் சார்பாகக் கொண்டு எழுகின்ற காலதத்துவம் என்னும் பெயருடைய இறைவனின், படைக்க வேண்டும் என்ற எண்ணத்தால் (சங்கற்பத்தினால்) இந்த அவ்வியக்கமானது முக்குணமும் சமமாய் ஒன்றாய்ப் பொருந்தியிருக்கும் வடிவமான காரணத் தன்மையை விட்டுச் சத்துவம் முதலிய மூன்று குணங்களாக வெளிப்பட்டு நிற்கும்,

பெயர் வடிவங்களாக வெளிப்படாத நிலையில், மாயையானது, அவ்வியக்தம் என்று கூறப்படுகின்றது.

இறைவன் அண்டங்கள் அனைத்தையும் படைத்துக் காத்தழிப்பதுபற்றி அவன் காலதத்துவம் என்னும் பெயரால் கூறப்படுகிறான்.

ஒடுக்கம்

எப்போது இறைவன் உயிர்களுக்கு வினைப்பயன் நுகர்ச்சிகளைத் தரப்பாராமுகம் ஆகின்றானோ, அப்போது அழிவூழி உண்டாகும். அந்த அழிவூழி (பிரளயம்) ஏற்படும் காலத்தில், எல்லாப் பொருள்களின் பதிவுகளும் (வாசனைகளும்) மாயையில் தங்குவதோடு, உயிர்களின் எஞ்சியுள்ள வினைப்பயன்களும் நுண்ணியவாய் (சூக்குமமாய்) மாயையில் தங்கும். எப்போது, அம்மாயையோடு கூடிய இறைவன் உயிர்களின் காலகர்ம பரிபாகத்தைச் சார்ந்து நேர்முகமாய் "உயிர்கள் துய்த்தற் பொருட்டு உலகைப் படைப்பேனாக" என்று எண்ணுகின்றானோ, அப்போது படைப்பு உண்டாம். இறைவன் படைக்க எண்ணும் போதுதான், பெயர் வடிவங்களாக வெளிப்படாத நிலையில் அவ்வியக்தம் எனப்படும் மாயை, சத்துவம் முதலிய மூன்று குணங்களாக வெளிப்பட்டு நிற்கும்.

முக்குணங்கள்

மூன்று குணங்களுள், சத்துவகுணம் உயர்ந்தது, வெண்ணிறமானது, தூயது; இரசோ குணம், உயர்வு தாழ்வின்றி இடைப்

பட்டது, செந்நிறமானது; அழுக்கானது; தமோகுணம், தாழ்ந்தது, கருநிறமானது, இருட்டானது.

இம்மூன்று குணங்களும், தம்முள் ஒத்திருப்பனவேனும், அவற்றுள் (நெருஞ்சி முள்ளில் ஒருமுள் மேற்பட்டிருத்தல் போன்று) மேற்பட்டிருக்கும்; மற்றவை கீழ்ப்பட்டிருக்கும். தூய்தான சத்துவ குணம் மேற்பட்டிருக்கும்போது, அழுக்கும் இருட்டுமான இரசோகுண தமோ குணங்கள் கீழ்ப்பட்டிருக்கும்; அழுக்கான இரசோகுணம் மேற்பட்டிருக்கும்போது, தூய்தும் இருட்டுமான சத்துவ தமோ குணங்கள் கீழ்ப்பட்டிருக்கும், இருட்டாண தமோ குணம் மேற்பட்டிருக்கும்போது தூயதும் அழுக்குமான சத்துவ இரசோ குணங்கள் கீழ்ப்பட்டிருக்கும் என்று உணர்தல் வேண்டும்.

தோற்றாவொடுக்கம் : வேறு :

படைப்பு முறைகளுள் இஃதொரு வகையாம்; மற்றொரு வகையும் உண்டு.

படைப்பு முறையை ஒன்றேபாகக் கூறாது மற்றொரு வகையும் உண்டு என்று கூறப்புகுவதன் அடிப்படை யாது?

கனவு முறை பிறழ்ந்தும் உண்டாகின்றது. அதுபோலக் கற்பனையாகப் பொய்யான உலகமும் முறை பிறழ்ந்தும் உண்டாகின்றது.இதன் ஒழுங்குமுறையை அறிய விரும்புகின்றவன் கானல் நீரில் ஆடையை நனைக்க விரும்புகின்றவனை ஒக்கும்.

1. சாந்தோக்கிய உபநிடதம் :

மறை முடிவுகளில், உலகப் படைப்புப் பலவகையாகச் சொல்லப் படுகின்றது. சாந்தோக்கிய உபநிடதம் என்ற மறை முடிவில், உண்மை வடிவப் பெரும்பொருளி (பிரஹ்மத்தி) லிருந்து, நெருப்பு, நீர், மண் என்பன முறையாக உண்டாயின என்று உலகப் படைப்புச் சொல்லப்பட்டுள்ளது.

2. தைத்திரீயம்

தைத்திரீயம் என்ற மறைமுடிவில் வான் (ஆகாயம்), வளி (வாயு) தீ, நீர், மண் என்னும் ஐந்து பூதங்களும் முறையாக உண்டாயின என்று உலகப் படைப்புச் சொல்லப்பட்டுள்ளது.

சில இடத்தில், எல்லாம் வல்ல இறைவன் உலகைப் படைக் கிறான் என்று முறையின்றியும் உலகத் தோற்றம் சொல்லப் பட்டிருக்கின்றது.

3. மறைமுடிவுகள் ÷ அத்வைதம்

இவ்வகையாக உலகத் தோற்றம் மறைமுடிவுகளில் பலவகை யாகச் சொல்லப்பட்டிருப்பதன் கருத்து யாது? உலகம் பொய்; அஃது ஓர் உண்மைப் பொருளாயிருக்குமிடத்து அதன் தோற்றத்தைப் பலவகையாக மறைமுடிவுகள் கூறியிரா. பல்வேறு வகையாகக் கூறியிருக்கின்றமையின், தோற்ற முறையைக் கூறுவதில் மறை முடிவுகளுக்குக் கருத்தின்று; ஆனால் அத்வைதப் பிரஹ்மத்தை (இரண்டற்ற ஒன்றான பெரிய பொருளை) அறிவிப் பதற்காக, உலகத்தை இல்லையென்று கூறப் பொய்யான அவ் வுலகத்தை இவ்வகையாகக் கற்பனை (ஆரோபம்) செய்திருக்கின்றது.

4. விசாரசாகரம்

எடுத்துக்காட்டாக மரயானை ஒன்று மேலெழும்புவதற்காக வேடிக்கைக்காகச் செய்யப்படுகின்றது. அதுபோது, அதன் காதும் வாலும் கோணுமாயின், அதை ஒழுங்குபடுத்த ஒருவரும் முயல்வ தில்லை. அதுபோல, அத்வைத ஞானத்தின் (இரண்டற்ற உணர்வின்) பொருட்டு உலகத்தைப் பொய்யென்று தள்ளுவதற்காக உலகம் கற்பிக்கப்படுகின்றது. ஆகையால் உலகத்தின் தோற்றக் கிரமத்தை ஒரே வகையாகக்கூற மறைமுடிவுகள் முயலவில்லை உலகத்தின் தோற்றத்தை ஒரேவகையாக மறைமுடிகள் கூறாமையின் அவற்றின் கருத்து உலகத்தைப் பொய் என்று தள்ளுவதிலாம்; அதன் தோற்றத்திலன்று என்று அறிதல் வேண்டும் இவ்வாறு விசார சாகரம் என்னும் நூல் கூறுகின்றது.

5. அத்வைதம்

1. கருவுடல் கற்பனை : அ. மகத்தத்துவம் முக்குணங்கள்

இனி, உலகப் படைப்பின் மற்றொரு வகையைப் பற்றிக் காண்போம்; உயிர்கள், வினைப்பயன்களின் பதிவுகளோடு ஒடுங்கப் பெற்றிருக்கும் அவ்வியத்தமே (பெயர் வடிவங்களாக வெளிப்படாத நிலையில் உள்ள மாயையே) உயிர்களின் வினைப்பயன்கள் பக்குவம் அடைந்திருத்தலைச் சார்ந்து எழுகின்ற காலதத்துவம் என்னும் பெயரையுடைய இறைவனது படைப்புக் கருதிய கருத்தால் (சமஷ்டி புத்திவடிவ) மகத்தத்துவமாம். சமஷ்டி எனினும் தொகுதி எனினும் ஒக்கும். விதைத்துத் தண்ணீர் வார்க்க, முளையுமாகாது, வித்தின் இயல்பும் காட்டாது, உப்பின (பருத்த) நிலையை அடைந்துள்ள வித்தைப் போன்று, காரணமான அவ்வியக்தமுமாகாது. காரியமான அகங்காரமுமாகாது

இடைநிலைப்பட்டதே மகத் தத்துவமாம். மகத் எனினும், மான் எனினும், புத்தி எனினும் ஒக்கும். அந்த மகத் தத்துவமே அகங்கார தத்துவமாகும். பின்னர் தோன்றுவனவற்றிற்குக் கருவியான அந்த அகங்கார தத்துவமே முற்கூறப்பட்ட சத்துவம் முதலிய முக்குணங்கள் ஆகும்.

(ஆ) மாயை

சத்துவம், இரசக, தமசு என்னும் இந்த முக்குணங்களிலே விண் (ஆகாயம்) போன்று, (மற்றதனோடு கலவாததாய், நீக்கமற நிறைந்துளதாய், நுண்ணியதாய்) இருக்கின்ற அறிவின் (பிறஹ்மத்தின்) சாயை (நிழல் அல்லது பிரதிபிம்பம்) உண்டாகும். இக்குணங்களிலே, தூய்தான முதற்குணமான சத்துவம் மாயை எனப்படும்.

(இ) அந்தரியாமி

தூய்தான சத்துவ குணத்தில் தோன்றிய பெரிய பொருளான பிரஹ்மத்தின் சாயை (நிழல்) ஆனது, எப்பொருளினும் உள்ளீடாய் நிறைந்திருப்பவனாகிய அந்தரியாமியாம். (**அந்தரியாமி** எனினும், **உண்ணிறைந்தோன்** எனினும், காரண சரீர சமட்டி அபிமானி எனினும், அஞ்ஞான உபகித சைதந்நியன் எனினும், காரணோபாதிகன் எனினும், மாயாபாசகன் எனினும், மாயாவி எனினும், ஜகத்யோனி எனினும், அநந்தமயன் எனினும், அட்சரன் எனினும், சபளப்பிரஹ்மம் எனினும், சகுணப் பிரஹ்மம் எனினும், பரன் எனினும், பரமன் எனினும், மகேசுவரன் எனினும், பரதேவதை எனினும், தத்பத முக்கியார்த்தன் எனினும், மாயோபாதிகன் எனினும் ஒக்கும்).

(ஈ) இறைவன்

அந்த அந்தரியாமியே (உண்ணிறைந்தோனே) தனக்கு உடம்பான மாயையிலும், அதன் திரிபான (பரிணாமமான) எல்லாவற்றையும் உணர்தல் முதலான (சர்வஞ்ஞத்வாதி) குணங்களிலும் யான், எனது என்னும் பற்று உறாதவன் ஆவான். அவனே உலகிற்கு நிமித்த காரணனாகிய இறைவனாம் (ஈசனாம்) (சர்வஞ்ஞத்துவம், சர்வேசுரத்துவம், சர்வ நியந்திருத்துவம், சர்வாந்தரியாமித்துவம், சர்வ கர்த்திருத்துவம் சர்வ சக்தித்துவம் முதலியன இறைவனது சிறப்பான (முக்கிய) குணங்களாம்).

ஈ (1) ஈஸ்வரனின் குணங்கள்

இறைவனுடைய சிறப்பான குணங்களைப் பற்றி விவேக சிந்தாமணி என்னும் நூல் அறிவிப்பது ஈண்டு நினைவு கூர்தற்கு உரியதாம்.

"அவ்வொருவனாகிய ஈச்சுரனுக்கே எக்காலத்திலும், எத்தேசத்திலும், காரியத்தை உண்டு பண்ணும் தன்மை இருத்தலின் **நித்தியத்துவ வியாபகத்துவமும்** (நிலையான நீக்கமற நிறைந்திலங்கும் தன்மையும்), எக்காரியத்தையும் அறிவதற்கும் செய்வதற்கும் சமர்த்தனாகையால் **சர்வஞ்ஞத்துவமும் சர்வ சக்திமத்துவமும்** (எல்லா அறிவும் எல்லா ஆற்றலும் உடைமையும்) காலமானது தான் அமூர்த்தமாய் (வடிவமில்லாததாய்) இலை பூ முதலியவற்றை உண்டாக்குமாறுபோலச் சகல காரியங்களையும் ஆக்குவோனாயிருத்தல் **நிட்களத்துவமும்** (வடிவமில்லையாந் தன்மையும்) சர்வாத்துமாக்கள் இதயத்திலும் அந்தரியாமியாகிப் புறம்பே சுருதிஸ்மிருதி ரூபமான ஆணையால் நியாமக (நடத்துவோ) னாயிருத்தலின் **சர்வ பிரேரகத்துவமும்** (எல்லாவற்றையும் ஏவி நடத்தும் தன்மையும்) குலாலாதி கர்த்துருத்துவத்தால் குயத் தன்மை முதலாகிய செய்தொழில் தலைமையுடைமையால்) அந்நியமான கடபடங்கள் நியமிக்கப்படுதல் போல், அந்நிய சரீராதியை நியமித்தலாலும் விசுவமெல்லாம் விசுவேசுவரனினின்றும் நியமமானவை என்று கருதி இருத்தலாலும் **சர்வாத்துமகத்துவமும்** (எல்லா வடிவமாதலும்), தனக்குப் பிதாவும் கர்த்தாவும் இன்றி அத்வீதியனாய் இருத்தலின் **சர்வ சுதந்திரத்துவமும்** (தன்வசத்தனாதலும்) ஆத்மாக்கள் செய்த கர்மத்தினை அநுசரித்துச் சுகதுக்கங்களைத் தருதலால் இராகத்துவேஷமின்மையும் (விருப்பு வெறுப்பு இன்மையும்), தன்னால் சிருஷ்டியான (படைக்கப்பட்ட) ஆகாயாதி ஜகத்தை வேறுவிதமாகச் சிருஷ்டி செய்வதற்கு வேறு சமர்த்தரில்லாமையால் **சர்வேசுரத்துவமும்** (எல்லா ஐசுவரியமும் வல்லமையும் உடைமையும்) உண்டென்பது நிச்சயம்".

(2) முதற்காரணம் ÷ நிமித்த காரணம்

எல்லா வுயிர்களின் உள்ளும் நிறைந்திலங்குபவனாகிய (அந்தரியாமியாகிய) இறைவனே உலகிற்கு நிமித்த காரணம் என்பது முன் கூறப்பட்டது. ஆயின், அதற்கு முதற்காரணம் யாது? எவ்வகையில் அவன் உலகிற்கு நிமித்த காரணன்?

உலகமாகிய காரியத்திற்கு (செயப்படுபொருட்கு) இறைவனது உடற்பகுதி (மாயை) முதற்காரணமும், உயிர்ப்பகுதி (சேதனபாகம்) நிமித்த காரணமும் ஆம்.

குடத்தின் தோற்ற இருப்பு ஒடுக்கங்களின் காரணமான மண், அதன் முதற் காரணம் எனப்படுதல் போல, உலகின் தோற்ற இருப்பு ஒடுக்கங்களின் காரணமான மாயை அல்லது இறைவனின் உடற்பகுதி அதன் முதற் காரணமாம்.

குடத்தின் தோற்ற மாத்திரத்திற்குக் காரணம் (குயவனும் தண்ட சக்கரங்களும்) நிமித்த காரணமாம். அதுபோல உலகின் தோற்ற மாத்திரத்திற்குக் காரணமான இறைவனின் உயிர்ப்பகுதி அதன் நிமித்த காரணமாம்.

சிலந்திப் பூச்சியினின்றுண்டாகும் நூலுக்கு அதன் உடற்பகுதி முதற்காரணமாயும், உயிர்ப்பகுதி நிமித்த காரணமாயும் இருத்தல் போன்று, இறைவனின் உடற்பகுதி உலகிற்கு முதற்காரணமாயும், உயிர்ப்பகுதி அதற்கு நிமித்த காரணமாயும் இருத்தல் உணரத் தக்கதாம்.

இறைவனுக்குத் தூய்தான சத்துவ குணவடிவ மாயையே சுழுத்தி நிலையும் (அவஸ்தையும்), கருவுடலும் (காரண சரீரமும்) இன்ப வடிவ உறையும் (ஆநந்தமய கோசமும்) ஆகும்.

அழுக்கான இரசோகுணமானது அவித்தை என்று கூறப்படும். (மாயைக்கும் அவித்தைக்கும் வேறுபாடு கூறுவது வேதாந்திகளுள் ஒரு சிலரது கொள்கையாகும்).

(ஊ) பிராஞ்ஞன்

(இருள் ஒன்றாய் இருந்தும், அது கூறுபட்டு நிற்கும்போது பலவாய்த் தோற்றுதல் போன்று, அவித்தை ஒன்றாய் இருப்பினும், அது கூறுபட்டு நிற்பதால் பலவாய்த் தோன்றுதலின் அது மலிந சத்துவம் (தேசு அறு அவித்தை—ஒளி குன்றிய மாயை) எனப்படும். மலிந சத்துவமாயுள்ள அவித்தைகள்தோறும் தோன்றியுள்ள அறிவின் (சித்தின்) சாயையே (பிரதி பிம்பங்களே) உயிர்த் தொகுதிகளாம். அப்போது தத்துவ ஞானத்தினால் (வாச்சிய பாகம்) நாசமாகா நின்று உயிர்த் தொகுதிகட்குப் பெயரும் பிராஞ்ஞன் (நன்றாயறிபவன்) என்று கூறப்படும்.,

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

தமிழ் இலக்கியத்தில் உரிமை வழக்கு

டாக்டர் இராம. சுப்பிரமணியன்,

நம்முடைய வாழ்க்கை நலன்களில் (Interest) பலவற்றைச் சட்டம் காத்து நிற்கிறது. அவ்வாறு காக்கப்படும் நலன்களே சட்டப்படியான நம்முடைய உரிமைகள் (Legal Rights) ஆகின்றன. எனது நிலத்தை நான் வைத்து அனுபவிப்பது என் உரிமை. நான் கொடுத்தக் கடனைத் திரும்பப் பெறுவது எனக்குள்ள உரிமையாகும். என்னுடன் ஒப்பந்தம் செய்து கொண்டவரை அந்த ஒப்பந்தப்படி நடக்கச் செய்யும் உரிமை எனக்கு உண்டு. இந்த உரிமைகளைப் பிறர் ஏற்று நடக்கவேண்டும். இவ்வாறு நமக்கு இருக்கும் பல்வேறு விதமான உரிமை, அந்த உரிமைகளை நிலை நிறுத்தும் வழிவகைகள், இவைகளைப் பற்றிக் கூறும் சட்டங்களின் தொகுப்பே உரிமை இயல் சட்டம் (Civil Law) என்று கூறுவார்கள்.

எடுத்துக்காட்டு:

1. சொத்து மாற்றுச் சட்டம்
   (Transfer of Property Act)
2. உரிமை இரக்கச் சட்டம்
   (Succession Act)
3. ஒப்பந்தச் சட்டம்
   (Contract Act)

என்பன சில முக்கியமான உரிமைச் சட்டங்களாகும்.

உரிமை வழக்கு என்பதை ஆங்கிலத்தில் 'Suit' என்று கூறுவர்.

இவ்வாறு அரசு, நீதி மன்றங்கள் மூலம் மக்களின் உரிமைகளை நிலைநாட்டி நீதி செலுத்துவதை, உரிமைகளைப் பாதுகாக்க நியாயம் வழங்குதலை ஆங்கிலத்தில் Civil Justice என்று கூறுவர். இவ்வழக்குகள் சான்று (Evidences) அடிப்படையிலேயே தீர்க்கப் படுகின்றன.

ஒருவரது உரிமைக்கு ஊறு விளைந்தால் அதற்குத் தக்க மாற்றீடு கோரி அவர் நீதிமன்றத்தின் வாயிலாக வழக்கிடுகின்றார். குற்றம் இழைத்தவர்களை நீதிமன்றம் விசாரித்து தண்டனை வழங்குகிறது. இவ்வாறு நிகழும் நீதி மன்ற நடவடிக்கைகளை

வழக்குகள் (cases) என்று கூறுகின்றோம். சிலப்பதிகாரத்தில் வருகின்ற வழக்குரை காதையும், பெரியபுராணத்தில் வருகின்ற தடுத்தாட்கொண்ட புராணமும் முறையே குற்ற வழக்கு, உரிமை வழக்குகளுக்குச் சான்றாக அமைந்துள்ளன.

குற்ற வழக்கு :-

குற்றம் என்றால் என்ன ? :- பிழை, தவறு, குறை, பழி, பாவம், குற்றம் என்ற சொற்களை நாம் ஒரே பொருளைக் குறிக்கும் வகையில் சாதாரணமாகப் பயன் படுத்துகிறோம். செருக்கும், சினமும், சிறுமையும் குற்றங்கள் என்று அறநூல்கள் கூறுகின்றன. ஆனால், குற்றம் (crime) என்ற சொல் சட்டத்தில் தனிப்பொருள் உடையது.

ஒருவரைக் குற்றவாளி என்று எப்பொழுது கூறுகிறோம் ? அந்தந்தக் காலத்தில் நிலவிவரும் சமுதாயக் கொள்கைகளின்படி சமுதாயத்திற்குத் தீங்கு விளைவிப்பன என்று அரசால் செய்யக் கூடாது என்று தடை செய்யப் பட்டதை, மீறிச் செய்யும் ஒருவனைக் குற்றவாளி என்று கூறுகிறோம். சட்டப்படி தண்டனைக்குரிய செயலைச் செய்தவர் குற்றவாளி ஆகிறார். திருடியவர் குற்றவாளி; கொலை செய்தவர் குற்றவாளி, திருடியவரையும், கொலை செய்தவரையும் சட்டம் தண்டிக்கின்றது. எனவே திருட்டும் கொலையும் குற்றச் செயல்களாகின்றன. சட்டப்படி தண்டனைக்குரிய செயல்களே குற்றங்கள் ஆகின்றன. இவ்வாறு குற்றம் இழைத்தோர்களை ஒறுத்து நீதி வழங்குவதை ஒறுத்தல் முறை (Criminal Justice) என்று கூறுகிறோம்.

குற்றம் இழைத்தோர் மீது இடப்படும் வழக்குகளில் ஆராயப் படுவது குற்றம் சாட்டப்பட்டவர் குற்றம் செய்தாரா என்பதுதான் குற்றம் சாட்டப்பட்டவர் செய்த குற்றத்தினையும் அக்குற்றத்தின் தன்மையினையும் ஆராய்ந்து அதற்கு ஏற்ப அவருக்குத் தண்டனை விதிக்கப் பெறுவது குற்ற வழக்குகள் (Criminal Cases) என்கிறோம்.

குற்றமான செயல்கள் எவைஎவை என்று வகைப்படுத்தி, அவைகளுக்குரிய தண்டனையையும், குற்றம் புரிந்தவர்கள் விசாரிக்கப் படும் முறைகளையும் கூறும் சட்டத்தைக் குற்ற இயல் சட்டம் (Criminal law) என்று கூறுகின்றோம்.

உரிமையில் உள்ள சிறப்புக்கள்:—

உரிமை என்றால் உரியதற்கு உடையவர் ஒருவர் உண்டு. உடையவர் இல்லாவிடில் உரிமையும் இல்லை. ஒரு ஆளைக் கொண்டுதான் அவரது உரிமைபற்றிப் பேசுகிறோம். உரிமைக்கு உடையவர் இன்றி உரிமை என்று தனித்து எதையும் சொல்ல முடியாது. உரிமைக்கு உடையவர் ஒருவராக இருக்கலாம்; பலராக இருக்கலாம். பொதுமக்களாக இருக்கலாம், அல்லது இனிப் பிறக்கும் குழந்தையாகவும் இருக்கலாம்.

உரிமை என்பதில் கீழ்க்கண்ட ஐந்து கூறுகள் (Ingrediants) உண்டு.

1. உரிமை உடையவர்
2. உரிமையில் தோன்றும் கடமையைச் செய்ய வேண்டியவர்
3. உரிமையின் பயனாகச் செய்ய வேண்டிய செயல்
4. உரிமையைச் சார்ந்த பொருள்
5. உரிமை பெற்றவரது உரித்தான நிலை

என்னிடம் கடன் வாங்கியவரிடமிருந்து, அந்தக்கடனைத் திரும்பப் பெறும் உரிமை எனக்கு உண்டு என்றால், அந்த உரிமையில் மேலே கூறப்பட்ட ஐந்து கூறுகளும் இருக்கின்றன.

1. கடன் கொடுத்த நான் கடனாகக் கொடுத்த அந்தப் பொருளுக்கு உடையவர்.
2. கடன் பெற்றவர் கடனைத் திருப்பிக் கொடுக்கும் கடப்பாடு உடையவர்.
3. கடனைத் திருப்பிக் கொடுப்பது, உரிமையின் பயனாகச் செய்ய வேண்டிய செயல்.
4. திரும்பப் பெறவேண்டிய பொருள் உரிமையைச் சார்ந்த பொருள் ஆகும்.
5. கடனைத் திரும்பப் பெறுவது எனக்குரிய நிலை.

உரிமைகள் ஒவ்வொன்றிற்கும் மேலே சொல்லப்பட்ட ஐந்து கூறுகள் உள.

உரிமை வழக்கு ஒன்றைத் தொடுப்பவர், தாம் கோரும் உரிமையை மெய்ப்பித்து நிலைநிறுத்துவதற்கான ஆவணங்களையும் அதுபற்றி அறிந்தவரின் உரைகளையும் நீதி மன்றத்தின் முன்

படைக்கின்றார். குற்ற வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவரே அக்குற்றத்தைச் செய்தோர் என்பதை மெய்ப்பிப்பதற்கான வகையில் நேரில் பார்த்தோரின் உரைகளும், இன்னும் மற்ற பொருள்களும் நீதிமன்றத்தின் ஆய்வுக்கு வரும் ஆவணங்கள், உரைகள், இவற்றைச் சான்று (Evidence) என்று குறிப்பிடுகிறோம்.

தமிழ் இலக்கியத்தில் காணப்படுகின்ற ஒரு உரிமை வழக்கினைக் காண்போம். இன்று **சிவில் வழக்குகள்** என்று கூறப்படும் **உரிமை வழக்குகளை** ஊர்ச்சபையோர் விசாரித்து வந்திருக்கின்றனர். அத்தகைய சபைகள் **அவை** எனவும், அத்தகைய சபைகளில் அமர்ந்து வழக்குகளை விசாரித்துத் தீர்ப்புக் கூறுபவர்கள் **அவைமாந்தர்** எனவும் அழைக்கப் பெற்றனர்; அவர்கள் எட்டுத் தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும் என்றும் **புறப்பொருள் வெண்பாமாலை** (நவை நீங்க நடுவு கூறும் **அவை மாந்தர்** இயல்புரைத்தன்று) கூறுகின்றது.

அவையோர்க்குரிய எண்வகைப் பண்புகளாவன குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம், வாய்மை, தூய்மை நடுவுநிலைமை, அழுக்காறாமை, ஆவாவின்மை என்பனவாகும்.

குடிப்பிறப்புக் கல்வி குணம் வாய்மை தூய்மை
நடுச்சொல்லு நல்லணி யாக்கம் – கெடுக்கும்
அழுக்கா றவாவின்மை அவ்விரண்டோ டெட்டும்
இழுக்கா வவையின்கண் எட்டு.

என்று வெண்பா விளக்குகின்றது.

சைவ சமயக் குரவர்களிலே ஒருவராகிய **சுந்தரமூர்த்தி** நாயனார் வாழ்க்கையை ஒரு உரிமை வழக்கில் தொடங்குகின்றார் சேக்கிழார்.

திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூரில் ஆதி சைவமரபில் சடையனாருக்கும் இசை ஞானியாருக்கும் தோன்றியவர் சுந்தரமூர்த்தி. பின்னர் நரசிங்க முனையருக்கு மகன்மையாகக் கொடுக்கப் பெற்றவர். அதனால் அவ் அரசனால் வளர்க்கப்பட்டு வந்தார்.

சுந்தரருக்குத் திருமணம் நடைபெற **இருந்தது**. அச்சமயம் பார்த்து ஒரு வயோதிகர் ஒரு வழக்குடன் வந்து "மணமகன் சுந்தரன் எனக்கு வழி அடிமை", என்கிறார். "உனக்கென்ன பேத்தியமா?" என்று கேட்கிறார் சுந்தரர். "பைத்தியம்

எனக்கல்ல; உனக்குத்தான்; இதோ உன் பாட்டன் எழுதிக் கொடுத்த ஓலை" என்கிறார் வயோதிகர்.

"எங்கே பார்ப்போம்?" - இது சுந்தரர்.

"உனக்கென்ன தெரியும்! உனக்கு இதைப் பார்க்கவே தகுதி கிடையாது" இவ்வாறு கூறிய வயோதிகர் ஓலையைச் சபையோருக்குக் காட்ட, அவ்வோலையைப் பற்றிக் கிழித்தெறிகிறார் சுந்தரர்.

வயோதிகரா விடுபவர்? சுந்தரரின் இச் செய்கையை மறுத்ததுடன், ஓலையைப்பார்த்துக் கிழித்தெறிந்ததன் மூலம் தன் வழக்கைச் சுந்தரர் மெய்ப்பித்துவிட்டார் என்கிறார்.

வயோதிகரது சொந்த ஊர் திருவெண்ணெய் நல்லூர் என்பது தெரியவரவே வழக்கு, திருவெண்ணெய் நல்லூர் சபையிலேயே விசாரிக்கப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்படுகிறது.

அடுத்துத் திருவெண்ணெய் நல்லூர் சபையோர் முன் வழக்கு ஆரம்பமாகிறது. வயோதிகன் தன் வழக்கை உரைக்கின்றார். அப்போது சபையோர் "மூவகைச் சாட்சியம் உண்டு [1] சூழ்நிலைச் சான்று [Circumstantial evidence] [2] ஆவணச் சான்று [Documentary evidence] [3] நேர்நிலைச் சான்று [Direct evidence by eye witnesess] இம்மூன்றில் ஒன்றைக் காட்டி நிரூபிப்பீர்களா?" என்று வினவுகின்றார்.

அதற்கு வயோதிகர். "சுந்தரன் கிழித்தெறிந்த ஓலைப் படியோலை [Copy of the Documents], மூல ஓலை [Original] என்னிடமுள்ளது. இந்த ஓலைக்கும் தீமை நேராது நீங்கள் பாதுகாப்பு வழங்குவீர்களானால் நான் அதைக் காட்டுவேன்" என்கிறார். இங்கே அவர் நீதிமன்றத்திடமிருந்து பாதுகாப்பு [Court's protection] வேண்டுகிறார்.

அத்தகைய சம்பவம் மீண்டும் நிகழாது பார்த்துக் கொள்ளுவதாகச் சபையோர் உறுதி கொடுத்த பின்னர், வயோதிகர் தம்மிடமுள்ள மூல ஓலையைக் காட்டுகிறார். அதில் மேலெழுத்திட்டவர்களில் (Endorsement) கையெழுத்தும் சரி பார்க்கப்படுகிறது.

நீதிமன்றத்தின் பதிவுப் பிரிவிலிருந்து சுந்தரரின் பாட்டனார் கையொப்பம் வைத்திருக்கும் மற்றோர் ஆவணம் வரவழைக்கப்பட்டு, வயோதிகர் காட்டிய ஆவணத்திலுள்ள கையெழுத்துடன் ஒப்பு நோக்கப்படுகிறது இரண்டும் ஒத்திருக்கவே, வயோதிகர் வழக்கில் வெற்றி பெற்றதாகத் தீர்ப்பு வழங்கப்படுகிறது.

இவ்வரலாற்றில் பல நீதி நுட்பங்கள் காணப்படுகின்றன. நாடாளும் மன்னன் ஒருவனால் வளர்க்கப்பட்ட சுந்தரரும், சாதாரணக் குடிமகன்போல் சபையோர் முன்னர் நடைபெற்ற விசாரணைக்கு உட்படுத்தப்படுகிறார். இதனால் நீதிமன்றங்களுக்குச் சுதந்திரம், தனி உரிமை (Independance) இருந்தமை அறிய வருகிறது.

தொடரும் வழக்கு எந்த நீதிமன்றத்தில், எந்தவூரில் தொடர வேண்டும் என்பது மிகவும் முக்கியமாகும். இதனை இன்றைய சமூக உரிமை நடைமுறைச் சட்டத்தொகுப்பு (Civil Procedure Code) 16, 17, 18, 19 & 20 ஆகிய பிரிவுகளில் கூறப்பட்டுள்ளது. இதனை நாம் இவ்வழக்கினை திருவெண்ணெய் நல்லூரார் சபைக்கு மாற்றியதிலிருந்து நன்கு அறியலாம். எல்லைக்கு உட்பட்ட வழக்குகளையே சபைகள் விசாரித்தன என்பதையும் உணரமுடிகிறது.

வழக்காடும்போது அவையினரை விளித்துப் பேசும் மரபு இப்பொழுதும் உண்டு. "Your Honour ! My Lord !" என்று இக்காலத்தில் வழங்குவது போலவே "மூதறிவீர்", அனைத்து நூலுணர்ந்தீர்" என்பன போன்ற சொற்கள் அவையின் முன் வழங்கப்பட்டன.

வழக்கு, அவையினர் முன்னர்க்காரண காரியங்களுடன் எடுத்துக் கூறப்படவேண்டும். காணுதல், கருதல், உரை என்ற மூன்று அளவைகளும் பொருந்துமாறு "சாரச்" சொல்லவேண்டும். அஃதோடன்றி அவையின் முன் நிருபிக்க வேண்டிய முயற்சி முறையீடு (complaint) செய்தவரின் வேலையாகும். அவையின் முன்பற்ற வேண்டும்" என அவையினர் கூறுவது எண்ணத்தக்கது. மெய்ப்பிக்கும் பொறுப்பு சட்டப்படியான உரிமை அல்லது கடப்பாடு எதையேனும் பற்றி எந்த நீதிமன்றமேனும் தீர்ப்புக் கொடுக்க வேண்டுமென்று எவரேனும் கோரி, அது அவர் அறைகிற சங்கதிகளின் உண்மையைப் பொறுத்திருக்குமேயானால், அவர், அந்தச் சங்கதிகளின் உண்மையை மெய்ப்பித்தல் வேண்டும். ஒருவர் எந்தச் சங்கதியின் உண்மையையேனும் மெய்ப்பிக்கக் கடமைப்பட்டிருக்கும்போது, மெய்ப்பிக்கும் சுமை அவரைச் சார்ந்திருப்பதாகச் சொல்லப்படும். (பிரிவு 101)

அதாவது சட்டப்படியான உரிமை அல்லது கடப்பாடு எதையேனும் பற்றி எந்த நீதிமன்றமேனும் தீர்ப்புக் கொடுக்கவேண்டுமென்று எவரேனும் கோரி, அது அவர் அறைகிற பொருண்மைகளின் உண்மையைப் பொறுத்திருக்குமேயானால், அவர், அந்தச் சங்கதிகளின் உண்மையை மெய்ப்பித்தல் வேண்டும்.

ஒருவர் எந்தப் பொருண்மையின் உண்மையேயையனும் மெய்ப்பிக்கக் கடமைப்பட்டிருக்கும்போது, மெய்ப்பிக்கும் சுமை அவரைச் சார்ந்திருப்பதாகக் சொல்லப்படும்.

வழக்கை எடுத்து வாதாடுகின்றவனை 'மன்றாடி' என்று அழைத்தனர். படியோலையைச் சுந்தரர் கிழித்த பின் முதியோர் 'ஓலையைக் கிழித்தமையே அவன் அடிமை எனக் காட்டும்'' என்று வாதமிடுவது அக்கால வழக்காடுமுறையை நன்கு உணர்த்தும். அவையோர், சுந்தரரைப் பார்த்து, அடிமையில்லை என்பதற்குத் தான் நியாயங்கள் கூறவேண்டும் எனக் கூறிய பொழுது, சுந்தரர் ''நீவிர் அறிவீர்'' எனச் சொல்லுவது ஆராய்வதற்கு உரியது. ''நீங்களே அறிவீர்கள்; நான் சொல்ல வேண்டியதில்லை; வேறு வகையில் நிருபிக்க வேண்டியதும் இல்லை'' என்று சுந்தரர் நீதிமன்றத்திற்கு எடுத்துக்காட்டுவது எதிரி வழக்காடும் முறையைக் காட்டும். நீதிமன்றம் நீதிமுறையில் கவனத்திற்கெடுத்துக் கொள்ளவேண்டிய எந்தச் சங்கதியும் மெய்ப்பிக்கப்படத் தேவையில்லை. [(No fact of which the court will take judicial notice need not be proved (S. 56)]

ஒப்பந்தங்கள் அசலாகவும், நகலாகவும் வழக்கில் இருந்தன. அசல் ஓலை, ''மூல ஓலை" என்றும், நகல் ஓலை 'படி ஓலை" என்றும் குறிப்பிடப்படுகின்றது. முதலில் அந்தணர் படி ஓலையினைக் கொணர்ந்தார்; ஆனால் அது கிழிக்கப்பட்டது. பிறகு திருவெண்ணெய் நல்லூரில் முதறிஞர் முன் மூல ஓலை ஒப்படைக்கப் பட்டது. இதனால் நீதி ஆராய்ச்சிக்கு மூல ஓலைகளை நீதிச் சபையினரால் வேண்டப்பட்டன என அறிகிறோம். இனி மூல ஓலையைச் சபை ஆராய்ந்த விதம் கவனிக்கத் தக்கது. அந்த ஓலை பழையதா, புதியதா என்று ஆராய்ந்தனர். ஏனெனில் ஆருரரின் தந்தையின் தந்தை எழுதிக் கொடுத்த ஓலையாக முதியவர் வழக்கில் கூறினரர். அதனால் அவையோர் 'தொன்மை நோக்கி' ''முப்பதாண்டு காலப் பத்திரமாகப் புலப்படுகின்ற அல்லது மெய்ப்பிக்கப்பட்டுள்ள பத்திரம் ஏதேனும், குறிப்பிட்ட வழக்கில் நீதிமன்றம் முறையானதென்று எண்ணுகிற பாதுகாப்பிலிருந்து தாக்கல் செய்யப்படுமிடத்து, குறிப்பிட்ட எவரது கையெழுத்திலேனும் இருப்பதாகப் புலப்படுகிற, அத்தகைய பத்திரத்தில் உள்ள கையொப்பமும், அந்தப் பத்திரத்தின் மற்ற பகுதி ஒவ்வொன்றும் அவரது கையெழுத்தில் இருப்பதாகவும் எழுதிக் கொடுக்கப்பட்ட அல்லது சான்றொப்பமிடப்பட்ட ஒரு பத்திரம் சம்பந்தமாக அது எவரால் எழுதிக் கொடுக்கப்பட்டுச் சான்றொப்பமிடப்பட்டதாகப் புலப்படுகிறதோ அவரால் அது

உரிய முறையில் எழுதிக்கொடுக்கப்பட்டுச் சான்றொப்பமிடப்பட்டது என்றும் நீதிமன்றம் அனுமானிக்கலாம்." (பிரிவு 90)

அந்த ஓலை மாற்றப்பெறுமானால், தெரிந்து கொள்வதற்காக அவ்வோலையில் தம் கையெழுத்தை அங்கு இட்டனர். இதனை "மேலெழுத்திட்டார்கள்" என ஆசிரியர் குறிக்கின்றார். பிறகு ஓலையில் உள்ள "கைச்சாத்து" சுந்தரரின் பாட்டனாருடையதா? என ஆராய்ந்தனர். அதற்காக அரண் தருகாப்பில் (Safe Custody) இருந்து மற்றோர் ஆவணத்தைக் கொண்டுவந்து "**ஆசிலா எழுத்தை**" (Genine and admittied signature and hand writing) நோக்கி, முதியவன் கொடுத்த மூல ஓலையையும் உடன் ஒப்பு நோக்கி உண்மையை உணர்ந்தார். இவ்வாறு ஓலைகளை எடுத்து வந்து கொடுப்பதற்கும் அவையின் அலுவல்களைக் கவனிப்பதற்கும் ஓர் அலுவலர் இருந்தார். அவருக்கு அருள்பெறு கரணத்தான் (Bench Clerk - Clerk of the Court) எனப் பெயர் வழங்கப்படுகிறது.

இக்கால நீதி முறையிலும் நேர் நிலைச் சான்று, சூழ்நிலைச் சான்று, ஆவணச் சான்று என மூன்று வகைச் சான்றுகளையும் காணமுடிகிறது. ஆவணங்களிலும் மூலம், படி என்பன போன்றவைகளும், கையொப்பங்களை ஒத்துப்பார்க்கும் முறையும் இன்றும் வழக்கில் உள்ளன.

நீதி வழங்கும் முறை நீண்ட காலமாகவே தமிழகத்தில் தலை சிறந்து உயர்ந்திருந்தது. மேலை நாட்டு முறைக்கு எந்த விதத்திலும் குறைந்ததில்லை. தமிழ் இலக்கியங்களையும், கல்வெட்டுக்களையும் துருவி ஆராய்ந்தால், தமிழனின் நீதிமுறை மற்றைய நாடுகளின் நீதிமுறையைக் காட்டிலும் உயர்ந்தது என்பதை உணரலாம்.

இன்றுள்ள இத்தகைய நீதிமுறை நுணுக்கங்கள் பண்டைத் தமிழகத்திலும் நடைமுறையில் இருந்தது என்பதை அறியும்போது தமிழகம் அன்று எவ்வளவு சிறப்புடன் விளங்கியது என்பதை, அக்காலத்து வாழ்ந்த சேக்கிழார் அங்கொன்றும் இங்கொன்றுமாக நமக்குப் படம்பிடித்துக் காட்டியிருக்கின்றார்.

தமிழ்-ஆங்கில வினா வகைகள்-ஓர் ஒப்பீடு

S. ரேணுகாதேவி, ஆய்வாளர்,

தமிழ், ஆங்கில மொழிகளில் காணப்படும் வினாவின் (interrogative) விளக்கம், அதன் தொடரியல் பண்புகள் (syntactic features), வகைகள் (Classification) முதலானவற்றை அமைப்பு அடிப்படையில் ஆய்ந்து வகைப்படுத்தி இவற்றுக்கு இடையே காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகளைக் கண்டறிவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

விடையினைப் பெறும் பொருட்டு ஒரு வாக்கியத்தில் அமையப் பெறும் இலக்கணக் கூறே வினா எனப்படும்.

1.1. தமிழில் வினாக்கள் :

ஒரு விடையினைப் பெறும் பொருட்டுக் கேட்கப்படும் வாக்கியம் வினா வாக்கியம் எனப்படும். இவ்வாக்கியத்தில் வினாவினைச் சுட்டும் ஒரு இலக்கணக் கூறு அமையப் பெற்றிருக்கும்.

வினா என்பது தொன்று தொட்டு வழங்கி வரும் கோட்பாடு என்பதனை மரபிலக்கணக்காரர்கள் வினாவைப் பற்றியும் அதன் வகையினைப் பற்றியும் கூறியுள்ள செய்திகள் வாயிலாக அறிய முடிகின்றது.[1]

இலக்கண நூலார் மட்டுமன்றி இக்கால மொழியியல் அறிஞர்கள் சிலரும் வினாவைப் பற்றித் தத்தம் கருத்தினைத் தெரிவித்துள்ளனர்.[2]

1.1.1. வினா வாக்கியத்தின் தொடரியல் பண்புகள்

1. வினா வாக்கியத்தில் வினாவைக் குறிக்க ஒரு வினா இடைச்சொல்லோ, ஒரு வினாச்சொல்லோ, அன்றி ஒரு மேல் வகுப்புக்கூறோ அமையப் பெற்று வரும்.

கீதாப் பார்த்தாளா ?	— வினா இடைச்சொல் வினா
யார் அது ?	— வினாச்சொல் வினா
சொல்லும் பதில்?	— மேல் வகுப்பு வினா

2. தமிழில் "ஆ", "ஓ", "ஏ", என்னும் மூன்று இடைச் சொற்கள் பயனிலைச் சொல்லோடு இணைந்து வரும் நிலையில் வினா வாக்கியம் அமையப் பெறுதல் உண்டு.

ராதை வந்தாள் + ஆ > ராதை வந்தாளா ?
இது மரம் + ஓ > இது மரமோ ?

3. இவ்வினாஇடைச்சொற்கள் எப்போதும் பயனிலையில் இறுதியில் மட்டுமே வரும்.

வேலை செய்ய விடலாமா ?

4. வினாச்சொற்களால் வினா அமையப் பெறும் நிலையில் வினாச்சொற்களான "எவன்", "என்ன", "யார்" போன்றவை வாக்கியத்தின் முதல், இடை, கடை நிலைகளில் அமையப் பெறலாம்.

யார் நேற்று வந்தது ?
நேற்று யார் வந்தது ?
நேற்று வந்தது யார் ?

5. வினாச்சொற்களில் "எவன்" "எவள்", "எவர்", "எது", "எவை" என்பன எண், பால் உருபுகளைக் கொண்டு வாக்கியத்தின் பயனிலையோடு பால், எண் தொடர்பு பெற்று அமைகின்றன.

எவன் வந்தான் ? எது வந்தது ?
எவள் வந்தாள் ? எவை வந்தன ?
எவர் வந்தார் ?

6. "எவன்", "எவள்", "எவர்", "யார்" என்னும் வினாச் சொற்கள் உயர்திணைக்கும் "எது", "எவை" என்னும் வினாச் சொற்கள் அஃறிணைக்கும், "எப்படி", "என்ன", "எவ்வளவு" போன்றவை விரவுத்திணைக்கும் அமைந்து வரும்.

எவன் வந்தான் ? —உயர்திணை
எது வந்தது ? —அஃறிணை
எப்படி வந்தார் ?
எப்படி வந்தது ? — விரவுத் திணை.

7. வினாச்சொற்களில் "எவன்", "எவள்", "எவர்", "எது", "எங்கு", "எவை", "யார்" என்பன தனிச் சொற்களாக அமைய "எவ்வளவு", "எப்பொழுது", "எம்முறை", "எப்படி", என்பன கூட்டுச் சொற்களாக அமைந்துள்ளன.

8. தமிழில் வினாச்சொற்கள் மட்டுமே தனித்து நின்று வினா (குறை) வாக்கியமாகச் செயல்படுதலுண்டு.

யார் ?

எவன் ?

எப்படி ?

1. 1 2. வினா வகைகள் :

தமிழில் வினாக்களை அவற்றின் அமைப்பு அடிப்படையில் 1. பகுப்பு வடிவ வினாக்கள், (segmental interrogative) 2. மேல் பகுப்பு வடிவ வினாக்கள் suprasegmental interrogatives) என இரு பெரும் வகையினவாகப் பகுக்கலாம்.

பகுப்பு வடிவ வினாக்களில் வினா பகுப்புக் கூறுகளாலும் (segmental features) மேல் பகுப்பு வடிவ வினாக்களில் வினா மேல் பகுப்புக் கூறுகளாலும் (suprasegmental features) உணர்த்தப் படுகின்றது.

1. 1. 2. 1. பகுப்பு வடிவ வினாக்கள் :

பகுப்பு வடிவ வினாக்களில், கட்டு வடிவங்களாலும், (bound forms) தனி வடிவங்களாலும் (free forms) வினா உணர்த்தப்படுகின்றது. வினா அமையப் பெறும் இவ்விரு நிலைகளையும் அடிப் படையாகக கொண்டு பகுப்பு வடிவ வினாக்களை, வினா இடைச் சொல் வகை வினா, வினாச்சொல்வகை வினா என இரண்டாக வகைப்படுத்துதல் இயலும்.

வினா இடைச்சொல் வகை வினாக்களில் வினா கட்டு வடிவங்களான "ஆ, ஏ,ஓ" என்னும் மூன்று இடைச்சொற்களால் உணர்த்தப் படும்.

வினாச்சொல் வகை வினாக்களில் வினா தனி வடிவங்களான வினாச் சொற்களால் (integrrogative words) உணர்த்தப்படும். இவ்வினாச் சொற்கள் தனிச் சொற்களாகவோ கூட்டுச் சொற்களாகவோ அமையப் பெறுதலுண்டு.

அது மானோ

அவள் மிருணாவா ? — வினா இடைச்சொல்வகை வினா

ஏன் போனாய் ?

எப்படி வந்தாய் ? — வினாச்சொல்வகை வினா

1.1.2.1.1. வினா இடைச்சொல் வகை வினாக்கள்

ஈண்டு "ஆ", "ஓ", "ஏ" என்னும் இடைச்சொற்களால் வினா உணர்த்தப்படுகின்றது. ஒரு வாக்கியத்தின் இறுதியில் இம்மூன்று இடைச்சொற்களில் ஏதேனும் ஒன்றினை இணைப்பதன் வாயிலாக வினா இடைச்சொல் வகை வினாக்கள் ஆக்கம் பெறுகின்றன.

நினைவு இருக்கிறது + ஆ > நினைவு இருக்கிறதா ?
திணிப்பான் + ஓ > திணிப்பானோ ?
அவ்வளவுதான் + ஏ > அவ்வளவுதானே ?

வினாஇடைச்சொற்கள் பெயர்ப் பயனிலையின் இறுதியிலோ வினைப் பயனிலையின் இறுதியிலோ வரப் பெறுதல் உண்டு.

அவர் மருத்துவரா ?
பண்ணன் வந்தானா ?

வினாஇடைச்சொல்வகை வினாக்களுக்கு "ஆமாம்" அன்றி "இல்லை" என்பதே விடையாக அமையப் பெறும்.

எல்லோரும் இங்கேதான் இருக்கிறீர்களா ?
"ஆமாம்"
ஆசிரியர் வந்து விட்டாரா ?
"இல்லை"

இன்னமும் வினாஇடைச்சொல்வகை வினாக்களுக்கு, வினா வாக்கியத்திற்குள் வரும் பயனிலையே விடையாக அமைதல் உண்டு

நீ ஜெயகாந்தன் நாவல்களைப் படிச்சிருக்கியா ?
"படிச்சிருக்கேன்"
உங்களுக்கு சேதி தெரியுமா ?
"தெரியும்"
இது மரந்தானா ?
"மரந்தான்"

விடை எதிர் மறையாக அமையும் நிலையில் எதிர்மறை அடியிலிருந்து தோன்றிய வினைச்சொல்லோ அல்லது எதிர்மறை உருபினைக் கொண்ட எதிர்மறைவினைச் சொல்லோ இவ்வகை வினா வாக்கியங்களுக்கு விடையாக அமைதலுண்டு.

பிள்ளை சாப்பிட்டானா ?
"சாப்பிட இல்லை"
உனக்கு இந்தி தெரியுமா ?
"தெரியாது"

இன்னமும் இத்தகைய வினாக்களுக்கு செய்தியும் விடையாக அமையும்.

நீ வருவாயா ?
நிச்சயமாய்

இங்கு "நிச்சயமாய் வருவேன்" என்னும் செய்தி வாக்கியம் "வருவேன்" என்னும் பயனிலையை இழந்து, குறை வாக்கியமாக அமைந்துள்ளது.

தமிழில் ஒரு தனி வாக்கியத்துடன் வினா வாக்கியம் இணையப் பெற்று தொடர்வகை வினா (tag question) அமையப்பெறும். இத் தொடர்வகை வினாவில் வரும் தனி வாக்கியம் உடன்பாட்டு வாக்கியமாக அமையும் நிலையில் வினா எதிர்மறை வினாவாகவும் தனி வாக்கியம் எதிர்மறை வாக்கியமாக அமையும் நிலையில் வினா உடன்பாட்டு வினாவாகவும் அமையும்.

ரெம்ப டயர்டா இருக்கிற ; இல்லியா ?
என்னிக்கும் மாறமாட்டாய் ; அப்படித்தானே ?

ஈண்டுக் கொடுக்கப்பட்ட சான்றுகளில் வினா வாக்கியங்கள் "ஆ", "ஏ" என்னும் வினா இடைச்சொற்கள் தனிச் சொற்களுடன் இணைவதால் அமையப் பெற்றுள்ளன.

இவ்வகை வினாக்களுக்கு "ஆமாம்" அல்லது "இல்லை" என்பதே விடையாக அமையப் பெறுவதால் இவ்வகை வினாக்களும் வினா இடைச்சொல் வகை வினாவின் பாற்பட்டவையே.

1.1.2.1.2 வினாச் சொல்வகை வினாக்கள்

வினாச்சொல்வகை வினாக்களில் வினா, வினாச்சொற்களால் உணர்த்தப்பெறும்.

தமிழில் "யார்", "எவன்", "எவள்", "எது", "எவர்", "எவை" "என்ன", "ஏன்", "எங்கு", "எப்போ", "எதற்கு", "எந்த", "எப்படி", "எத்தனை", "எங்ஙனம்", "எவ்வளவு", "எவ்வாறு", "எம்முறை" போன்ற வடிவங்கள் வினாச்சொற்களாகச் செயல் படுகின்றன,

இவ்வினாச்சொற்களில் ''யார்'' என்னும் வினாச் சொல்லைத் தவிர ஏனைய வினாச்சொற்கள் அனைத்தும் ''எ'' என்னும் வினா வடியிலிருந்து ஆக்கம் பெற்றவைகளாக அமைந்துள்ளன.

''எவன்'', ''எவள்'', ''எவர்'', ''யார்'', என்னும் வினாச் சொற்கள் உயர்திணைக்கும், ''எது'', ''எவை'' என்னும் வினாச் சொற்கள் அஃறிணைக்கும் ஏனையவை இருதிணைக்கும் பொருந்தி வரும். (ஒ. பா. 1. 1. 1. 6)

''எவன்'', ''எவள்'', ''எது'', ''எவை'' என்றும் வினாச் சொற்கள் பயனிலையோடு பால் - எண் தொடர்பினைக் கொண்டு அமையும் (ஒ. பா. 1. 1. 1. 5).

வினாச்சொல்வகை வினாக்களில் வினாச்சொற்கள் வினா வாக்கியத்தில, முதல், இடை, கடை நிலைகளில் வரும்.

(ஒ. பா. 1.1.1.4.)

வினாச்சொற்களை அவற்றின் அமைப்பு அடிப்படையில் தனி வடிவ வினாச்சொற்கள் (Simple interrogative words) எனவும் கூட்டு வடிவ வினாச்சொற்கள் (Compound interrogative words) எனவும் இரண்டாக வகைப்படுத்துதல் இயலும்.

''எவன்'', ''எவள்'', ''எவர்'', ''எது'', ''என்ன'', ''எவை'' ,'ஏன்'', ''எங்கு'', ''எந்த'', ''எதற்கு'', ''எத்தனை'', ''யார்'', என்பன தனி வடிவ வினாச் சொற்களாகும்.

''எப்படி'', ''எவ்வளவு'', ''எம்முறை'', ''எப்பொழுது'', ''எவ்வாறு'' என்பன கூட்டு வடிவ வினாச்சொற்களாகும். இவை வினா அடிச் சொல்லோடு பிறிதொரு பெயர் இணைவதன் வாயிலாக அமைந்துள்ளன.

வினாச்சொல்வகை வினாக்களுக்கு விடை பெரும்பான்மையும் ஒரு செய்தியாகவே அமைந்து வரும்.

எங்கு பார்த்தாய்?
''வீட்டில்'',
என்ன உதவி வேண்டும்?
''பணம் வேண்டும்''.

1.1.2.2. மேல் பகுப்பு வடிவ வினாக்கள்

வாக்கியத்தின் இறுதிச் சொல்லின் மேற்பகுப்புக் கூறாகிய சுரவிசையை (intonation) உயர்த்துவதால் அமையப் பெறும் வினா மேல்பகுப்பு வடிவ வினா எனப்படும்.

சொல்லும் பதில் ? ↑
சுதந்திரம் அடைத்தபின் இந்தியாவின் நிலை ? ↑

மேல் பகுப்பு வடிவ வினாக்களுக்கு "ஆமாம்" அன்று "இல்லை" என்பதே விடையாக அமையப்பெறும்.

நீர் பார்த்தீர் ? ↑
"ஆமாம்"
இது மரம் ? ↑
"இல்லை"

இன்னமும் இவ்வகை வினாக்களுக்கு ஒரு செய்தியே விடையாக அமையப் பெறுதல் உண்டு.

உன் வீடு ? ↑
"மதுரையில்"
வீட்டிற்குப் போகும் நேரம் ? ↑
"மாலை நான்கு மணி."

1. 2. ஆங்கிலத்தில் வினாக்கள் :

ஆங்கிலத்தில் ஒரு விடையைப் பெறும் பொருட்டுக் கேட்கப் படும் வாக்கியம் வினா வாக்கியம் ஆகும். இவ்வாக்கியத்திலும் வினாவினைச் சுட்டும் ஒருஇலக்கணக் கூறு அமையப்பெற்றிருக்கும்.

1. 2. 1. வினாவாக்கியத்தின் தொடரியல் பண்புகள் :

1. ஆங்கிலத்தில் வினா வாக்கியங்களில் துணைவினையோ (auxillary verb) வினாப்பெயர்ச்சொல்லோ (interragative pronoun) மேல் பகுப்புக் கூறோ அமையப் பெற்று வினா உணர்த்தப் பெறும்.

Are you Coming ? — துணை வினா
What are you doing ? — வினாப் பெயர்ச்சொல் வினா
You bought this book ? — மேல் பகுப்பு வடிவ வினா.

2. வினாவை உணர்த்தும் துணை வினைகள் எப்பொழுதும் வாக்கியத்தின் முதலிலேயே அமையும்.

Is there any meeting today ?

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

தமிழ்ப் பொழில்

பதிப்பாசிரியர் குழு

1. திரு. ச. இராமநாதன், அவர்கள்
தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

2. திரு. கி. சந்திரமோகன், பி. ஏ., பி. எல்., அவர்கள்
செயலாளர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

3. திரு. புலவர் க. வெள்ளைவாரணனார் அவர்கள்
பேராசிரியர், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

4. திரு. டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்,
எம். ஏ., எம். லிட்., பி. எச். டி., அவர்கள்
தமிழ்த் துறைத் தலைவர், சென்னைப் பல்கலைக்கழகம்.

5. திரு. டாக்டர் தமிழண்ணல், எம். ஏ., பி. எச். டி., அவர்கள்
தமிழ்ப் பேராசிரியர், மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.

6. திரு. சிலப்பொலி சு. செல்லப்பன், எம். ஏ., அவர்கள்
தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர், சென்னை.

7. திரு. பேராசிரியர், புலவர் பி. விருத்தாசலம், எம்.ஏ., அவர்கள்
முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2.

8. திரு. பேராசிரியர், புலவர் ச. பாலசுந்தரம் அவர்கள்
367, மேல அரச வீதி, தஞ்சாவூர்.

9. திரு. புலவர் சி. கோவிந்தராசனார் அவர்கள்
பேராசிரியர், மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.

10. திரு. புலவர் மீனா. இராமதாசு, எம். ஏ., அவர்கள்
உமாமகேசுவரா மேல் நிலைப்பள்ளி, தஞ்சாவூர்-2.

தமிழ்த்தாய் வாழ்க

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

தமிழ்ப் பொழிலின் கையொப்பம்

			உள் நாடு		வெளி நாடு
1.	ஆண்டு வரி	...	20—00	...	030—00
2.	தனி இதழ்	...	02—00		
3	ஆயுள் வரி	...	250—00	...	250—00

—: சங்க உறுப்பினர்கள் :—

திங்கள் வரி	...	000—25
ஆண்டு வரி	...	003—00
ஆயுள் வரி	—	100—00